# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 7 | இதழ்: 1 | அக்டோபர் : 2022 | ரூ.20/- |
| Volume: 7 | Issue: 1 | October : 2022 | Rs.20/- |



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**09.09.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ லக்ஷ்மி காமாட்சி கோவில்**

பிஷப் கார்டன் தெரு, ராஜா அண்ணாமலை புரம்
சென்னை - 600 028..

**16.09.2022 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு பெரியபாளையத்தம்மன் கோவில்**

மாடம்பாக்கம், சென்னை - 600 126.

**23.09.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில்**

23, 6வது குறுக்கு தெரு, மங்களா நகர்,
போரூர், சென்னை - 600 116.

**30.09.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ பொன்னி அம்மன் திருக்கோவில்**

நாயுடு தெரு, கோட்டூர், சென்னை - 600 085.

**07.10.2022 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு நாகாத்தம்மன் கோவில்**

மாஸ்க் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

**14.10.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில்**

படேல் தெரு, குரோம்பேட்டை, சென்னை - 600 044.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி

## செய்திகள்



காயத்ரீ தேவி

வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம். மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 37

**அபை[1]து ம்ருத்[1]யுரம்ருத[1]ம் ந ஆக[3]ந் வைவஸ்வதோ[1]**
**நோ அப[4]யம்**
**க்ருணோது[1] ப[1]ர்ணம் வநஸ்ப[1]தே[1]ரிவாபி[4]ந:**
**சீயதா[1]கும்ரயிஸ் ஸசதா[1]ந் நச்சசீபதி:**

**-ம்ருத்[1]யு நிவாரண மந்த்ர :**

**பொருள் :** *எங்களிடமிருந்து மரணம் விலகிப் போகட்டும். மரணமிலா பெருவாழ்வு எங்களிடம் வரட்டும். யமதர்மராஜன் (வைவஸ்வதன்) எங்களுக்கு பயமில்லாமல் செய்யட்டும். எங்களுடைய பாவமும் பயமும் மரத்திலிருந்து இலை உதிர்வது போல் அழிந்து போகட்டும். இந்த்ரனுடையது போன்றசெல்வம் எங்களை வந்தடையட்டும்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 7 இதழ்: 1

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்



**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950



அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி, செ-42.
போன்: 9025864231


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 6 |
| 9-ம் ஆண்டு வாழ்த்துக்கள் | 8 |
| ஐப்பசி மாத விசேஷங்கள் | 25 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 28 |
| ஸ்ரீமத் பாகவதம் | 31 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 34 |
| தெரிந்து கொள்வோம் | 43 |
| ஔவையார் | 45 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 47 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 49 |
| தர்மத்தின் குரல் | 51 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 52 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 53 |
| எண்ணமே வாழ்க்கை | 56 |
| இராமாயணம் காட்டும் பாதை | 60 |
| பித்ரு பூஜை ஆலயம் | 68 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB 0000262



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## வேதபாரதி

*(பாரதப் பண்பாட்டு அமைப்பு)*

# "வேதபாரதி செய்திகள்" – 9 ஆம் ஆண்டு

*பாரதப் பண்பாட்டு அமைப்பான* **"வேதபாரதி"** *யின் மாதாந்திர ஆன்மீக பத்திரிகையான* **"வேதபாரதி செய்திகள்"** *ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் முடிந்து இந்த மாதம் (2022 அக்டோபர்)* **ஒன்பதாம் ஆண்டில்** *அடி எடுத்து வைக்கிறது. இத்தருணத்தில்* **"வேதபாரதி செய்திகள்''** *பத்திரிகையின் அன்பான சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்,*

*பத்திரிகைக்கான செய்திகளை வடிவமைத்து தட்டச்சு செய்து கொடுக்கும் வேளச்சேரி,* **"ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்"** *நிறுவனத்திற்கும்.....*

*பத்திரிகையை புத்தகவடிவில் சிறப்பாக அச்சடித்து தரும்* **சென்னை சபாநாயகம் பிரிண்டர்ஸ்** *உரிமையாளர் அவர்களுக்கும், விளம்பரங்கள் மூலம் பேராதரவை அளித்துவரும் நிறுவனங்களுக்கும், பத்திரிகை மாதாமாதம் சிறப்பாக வெளிவர அயராது பாடுபடும் வேதபாரதி உறுப்பினர்களுக்கும்......*

*வேதபாரதியின் அன்பான வாழ்த்துக்கள்*

**ஆசிரியர், புத்தகக்குழு**

---

**குறிப்பு :** *இந்த மாதம் முதல் வாசகர்களுக்காக பத்திரிகை அதிக பக்கங்களுடன், புதிய சுவையான தொடர் பகுதிகளுடன் வெளிவருகிறது.*

## ஒரு நிமிடம் உங்களோடு...

# 51. சத்தியம்

*எது மாறாமல் இருக்கிறதோ அது* **"சத்தியம்".** *எது மாறிக்கொண்டே இருக்கிறதோ அது சத்தியம் அல்ல.* **"சத்தியம்"** *என்றால்* **"உண்மை"** *என்று பொருள்.* **"சத்தியம்"** *என்றால்* **"ஆத்மா"** *என்றும் பொருள்.* **"சத்யம் வத"** *= உண்மையைப் பேசு".*

*பகவானுடைய ஸ்வரூபம்* **"சத்தியம்".** *அவர் சத்தியவடிவாக விளங்குகிறார். ஸ்ரீமத் பாகவதம் ஆரம்பிக்கும் போது* **"ஸத்யம் பரம் தீமஹி"** *என்றுதான் ஆரம்பிக்கிறது. முடியும் போதும்* **"ஸத்யம் பரம் தீமஹி"** *என்றுதான் முடிகிறது. இதன் பொருள் =* **"சத்யஸ்வரூபியான அந்த பரமாத்மாவை தியானஞ்செய்வோம்''.** *பகவான் சத்தியத்திற்கு மட்டும்தான் கட்டுப்படுகிறார்.*

*நிலம், நீர், ஒளி, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களும்* **"சத்தியம்''** *என்று அழைக்கப்படுகின்றன.*

**"சத்தியம்"** *உள்ளுக்குள்ளும் இருக்க வேண்டும், வெளியிலும் இருக்க வேண்டும். அதாவது மனதிலும் இருக்க வேண்டும் பேச்சிலும் இருக்க வேண்டும்.*

**"சத்தியம்''** *குறித்து மஹாபெரியவாளுடைய வாக்கு = "சகல மக்களும் அநுசரிக்க வேண்டிய சாமானிய தர்மங்களில் முதலாவது* **"அன்பு''** *(அஹிம்ஸை) அடுத்தது* **"உண்மை"** *(சத்தியம்). மனதில் ஒன்றும் வாக்கில் வேறொன்றுமாக இருந்தால் அது "அசத்தியம்'.*

**"ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்"** *பேச்சினாலும், காரியத்தினாலும், எண்ணத்தினாலும் பிராணிகளுக்கு*

நன்மை உண்டாக்குவதே **"சத்தியம்"**. கெடுதல் செய்வதெல்லாம் **"அசத்தியம்"**.

மஹான்கள் செய்யும் ஆசீர்வாதங்கள் அல்லது அவர்கள் கொடுக்கிறசாபம் எல்லாம் அப்படியே பலித்துவிடுவதற்குக் காரணம் அவர்களுடைய சத்தியத்தின் சக்திதான்.

மஹாத்மா காந்தியின் சுய சரிதைக்குப் பெயர் **"சத்திய சோதனை"**. சுவாமி விவேகானந்தர் "உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது" என்று கூறியுள்ளார்.

' எக்காலத்திலும் சத்தியத்தை (உண்மையை) ஒளித்து வைக்கக் கூடாது. "சத்தியம்" நலன்களைத் தந்து நம்மை உயர்த்தி ஓங்கவைக்கும். தன்னுடைய வாழ்க்கையில் சத்தியத்தையே நித்தியமாகக் கொண்ட அரிச்சந்திரனை அறியாதவர் யார்? அரிச்சந்திரன் சத்தியத்தைக் கடைபிடித்து புகழ்ப் பெற்றான்.

உலகில் "சத்தியம்" தழைத்தோங்கட்டும்.

**D. சூரியநாராயணன்**


உ

ஸ்ரீ குருவே சணம்

# வேதபாரதி

## கோடி காயத்ரீ ஜப யக்ஞம் - பூர்த்தி விழா

27.11.2022, ஞாயிற்றுக்கிழமை

இடம் :

**ஸ்ரீ சங்கர வித்யாலயா, ஊரப்பாக்கம்**

சென்னை.

**அனைவரும் வருக! வருக!!**

தொடர்பு :

**94441 32170 / 98408 38378**

உ
குருவே சரணம்

# பூஜ்ய ஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிகள் வேதபாரதி செய்திகள் மாதபத்திரிக்கைக்கு அருளிய வாழ்த்துரை செய்தி

ॐ नमः शङ्कराय

I know personally that Veda Bharathi is doing very good work for strengthening the Vedic tradition. Various programs are held in many parts of Tamilnadu such as Gayathri yajna, Rudra homam, Lalitha Sahasranamam etc involving hundreds of people and sometimes even thousands. Occasional training classes are also held for young boys and girls. Such programs will help in keeping their minds pure. I pray Narayana to bless this institution with success in their noble goal.

Swami Paramananda Bharathi

# வேதபாரதி இதழ் – ஒரு தவம்



இவ்வருடம் வேதபாரதி இதழின் 9-ம் ஆண்டு துவக்கம். ஒரு இதழ் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளின் பயணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அது சாதாரணமான விஷயமல்ல. இதற்குப் பின்னால் எத்தகைய ஒரு சேவையும், உழைப்பும் இருக்க வேண்டும் என்பது கண்கூடு.

ஒரு மாதம் கூட தவறாமல் இதழ் வரவேண்டும் என்பதும், வரவழைப்பதும் ஒரு தவம். எந்த பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பார்க்காமல், இந்த மேலான தவத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் அவர்களுக்கும், தமது பொன்னான நேரத்தினை செலவு செய்து கட்டுரைகளை அளிக்கும் எழுத்தாளர் பெருந்தகைகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்குகிறேன்.

**T.R. ராமநாதன்**
*நிறுவன அறங்காவலர், வேதபாரதி.*

உ
ஸ்ரீ குருவே சரணம்

**வேதபாரதி**

**புதிய ஸ்லோக வகுப்புகள்**

**வாரம் 2 நாட்கள்**
**மாலை 1 மணி நேரம்**

**குழந்தைகள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.**


தொடர்பு :

**94434 89129 / 94884 22768**

# வாழ்த்துக்கள்

ஹரி ஓம்

ஸ்ரீ மகா பெரியவா சரணம்



மிக்க மிக்க சந்தோஷம். நமது வேத பாரதி செய்திகள் மாதப் பத்திரிகை ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவு பெற்று தற்போது ஒன்பதாமாண்டு துவக்கத்தில் உள்ளது.

இந்த நன்னாளில் எலோரும் எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று வாழ பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி சுவாமிகளின் பொற்பாதங்களை வணங்கி மகிழ்கிறேன். வேதபாரதி செய்திகள் பத்திரிகை எட்டு ஆண்டுகள் நிறைவு பெற்றது என்று சொன்னால் ஒவ்வொரு மாதமும் ஒரு தாயானவள் பிரசவம் அடைந்தது போல் தான். நம் புத்தக குழுவினர் பிரதிமாதம் புத்தகம் வெளிவர அதற்காக 90 மாதங்கள் தொய்வின்றி உழைத்துள்ளார்கள். 2014-ம் ஆண்டு முதல் இன்று வரை புத்தகம் சிறப்பாக வர வேண்டும், சரியாக வரவேண்டும், குறிப்பிட்ட நேரத்தில் வர வேண்டும் என்று முழு சிந்தனையோடு உழைத்து வரும் எங்கள் வேத பாரதி பெரியவர் ஸ்ரீ சூரிய நாராயண மாமா அவர்களுடைய முழு கவனம், முழு சிரத்தை இருப்பதே முக்கிய காரணம்.

மேலும் புத்தகம் வெளிவர உதவிய தட்டச்சு ஸ்ரீமதி.சசிகலா, மேலும் புத்தகம் சரிவர அனுப்பும் வேலையை செய்து வரும் நம் நண்பர்கள் வேளச்சேரி ஸ்ரீராமன், ஸ்ரீவைத்யநாதன் மாமா, நங்கநல்லூர் ஸ்ரீ சங்கர், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீஸ்ரீராம், ஸ்ரீமதி காமாட்சி மற்றும் பிழை திருத்தம் பார்க்கக்கூடிய


*வேளச்சேரி கிருஷ்ணன், ஸ்ரீமதி அன்னபூரணி, ஸ்ரீ ரகுநாத் மாமா எல்லோரையும் மனதார வேதபாரதி பாராட்டுகிறது. மேலும் இந்த புத்தகத்திற்கு விளம்பரம் செய்து வரும் விளம்பரதாரர்கள், எப்பொழுதும் ஆசி வழங்கி அறிவுரை சொல்லும் ஸ்ரீ முனீஸ்வரர் மாமா அவர்கள் மற்றும் குறித்த காலத்தில் புத்தகம் தயார் செய்து அனுப்பும் ஸ்ரீ சபாநாயகம் பிரிண்டர் அவர்கள் எல்லோருக்கும் வேதபாரதியின் கனிவான அன்பான வாழ்த்துக்கள்.*

**R. வெங்கட்ராமன்**
*ஆசிரியர்*


**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**
**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபல் ட்ரஸ்ட்**
**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

*தொடர்பு :* **ஸ்ரீ நடராஜன்**
*ஊத்துக்கோட்டை, திருவள்ளுவர் - 602 023*

**8940224744 / 9363111799**

# "வேதபாரதி செய்திகள்" எழுத்தாளர்களின் வாழ்த்துரைகள்



எல்லாம் வல்ல பரமேஸ்வரரின் க்ருபையாலும், பூஜியஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் அனுகிரஹத்தாலும், **"வேதபாரதி செய்திகள்"** ஆன்மிக மாத இதழ் எட்டு ஆண்டுகளைக் கடந்து, இந்த மாதம் (2022 அக்டோபர்) 9-ம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

**"வேதபாரதி"** = பாரதப் பண்பாட்டு அமைப்பு தன்னலம் கருதாமல் ஆண், பெண் குழந்தைகளுக்கும், கிரஹஸ்தர்களுக்கும் எராளமான நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. அப்படி நடத்தும் நிகழ்ச்சிகளின் விவரங்களையும் ஆன்மீக விஷயங்களையும் மக்களிடம் எடுத்து செல்வதற்காக 2014-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த **"வேதபாரதி செய்திகள்"** ஆன்மிக பத்திரிகை.

பல ஆயிரம்பேருக்கு நிழல் தரக்கூடிய மிகப்பெரிய ஆலமரம் கடுகுபோன்றமிகச் சிறிய விதையிலிருந்துதான் தோன்றி வளர்கிறது. அதுபோல் ஆரம்பத்தில் நாங்கு பக்கங்களைக் கொண்ட பத்திரிகையாக இருந்த **"வேதபாரதி செய்திகள்"** 8 ஆண்டுகளாக பல இடர்களைச் சந்தித்து இன்று 56 பக்கங்களைக் கொண்ட பத்திரிகையாக மாதா மாதம் 1000 சந்தாதாரர்களைச் சென்றடைகிறது.

பத்திரிகையின் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் :

1. "வேதபாரதி" அமைப்பின் செயலாளரும், "வேதபாரதி செய்திகள்" பத்திரிகையின் ஆசிரியருமான திரு.வெங்கட்ராமன் அவர்களின்

விடா முயற்சியியும் அயராத உழைப்பும் முதன்மையான காரணங்கள்.

2. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் மிகச் சிறந்த கட்டுரைகளை தொடர்ந்து கடந்த 8 ஆண்டுகளாக அளித்துவரும் திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி, டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன் போன்ற எழுத்தாளர்கள்.
3. பத்திரிகை மாதா மாதம் குறிப்பிட்ட காலத்தில் வெளிவர தங்களது உழைப்பை நல்கும் வேதபாரதி உறுப்பினர்கள்.
4. பத்திரிகைக்கு பேராதரவு அளித்துவரும் வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள்.

**"வேதபாரதி செய்திகள்"** பத்திரிகை தொடர்ந்து பல ஆண்டுகள் வெற்றி நடைப்போட எல்லாம் வல்ல ஸ்ரீ பகவானை ப்ரார்த்திக்கிறேன்.

வேதபாரதியின் தொண்டன்
**D. சூரியநாராயணன்**


# வேதபாரதி ONLINE வழியாக

**ரிக், யஜுர், ஸாம வேத வகுப்புகள் :**
**ஸந்த்யா வந்தன வகுப்புகள்** நடந்து வருகிறது.
அத்யாபகர் :
ப்ரம்ஹஸ்ரீ கைலாசநாத கனபாடிகள்
பொறுப்பாளர்கள் :
ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர்.
ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடைபெறுகின்றன.
தொடர்புக்கு : **99949 26537 / 9445102193**

# மனமார்ந்த வாழ்த்துக்கள்



வேதபாரதி எட்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஒன்பதாம் ஆண்டில் கால் பதிக்கிறது. எத்தனை எத்தனை ஆன்மீகப் பணிகள், அக்கறை மிகுந்த சமூக நலப் பணிகள், இந்துக் குடும்பங்களின் மீது அக்கறை கொண்ட நிகழ்ச்சிகள், சிறுவர் சிறுமியர்களுக்கான நல்லொழுக்க வகுப்புகள், பேரிடர் காலங்களில் ஜாதி மத பேதமின்றி பொது சேவைகள், தேசப் பற்று மிகுந்த நிகழ்ச்சிகள், தமிழ் இலக்கிய போட்டிகள் என்று சொல்லிக்கொண்டே போகும் வகையில் வேதபாரதி அயராது, இயங்கிக்கொண்டே இருக்கிறது. காலில் சக்கரம் கட்டிக்கொண்டதைப் போன்றதலைவர் திரு.வெங்கட்ராமன் ஜி, அவர்களின் வயதுக்கு மீறிய ஓட்டம், வயதா? எனக்கா? என்று கேட்கும் அயராத உழைப்பாளி திரு.சூரிய நாராயணன் ஜி, இவர்களது மன ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து ஒத்துழைக்கும் உறுப்பினர்கள் என்று வேதபாரதி தன் கடமைகளை செவ்வனே செய்து கொண்டிருக்கிறது. சில சமயங்களில் அதன் நிகழ்ச்சி ஏற்பாடுகள் பிரமிக்க வைத்துவிடுகின்றன. சின்ன அமைப்பு, சிறந்த செயலாக்கம், வேதபாரதியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இறைவன் நீண்ட ஆயுளையும் சிறந்த தேக ஆரோக்கியத்தையும் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களின் பணிகள் மேலும் மேலும் தொடரவேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து, என் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

அன்புடன்

**Dr.ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

# வாழ்த்துரை



வேதபாரதியின் ஆரம்ப பேச்சுவார்த்தைகள் எங்கள் வீட்டில் நடத்த பொழுது, "சமூகத்தில் பெண் குழந்தைகள் வழிதவறாமல் நடத்திச்செல்ல பெற்றோர்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டும்'' என்று நால்வர் குழுவாக திரு.கிருஷ்ண ஜகந்நாதன்ஜி, திரு.திருப்பூர் ராமநாதன்ஜி, திரு.வெங்கட்ராமன்ஜி மற்றும் சங்கரா டி.வி. புகழ் மறைந்த ஜோதிடர் திரு.சீதாராமன்ஜி ஆகியோர் எங்கள் வீட்டில் பேசினார்கள்.

என்னைச் சந்திக்குமாறு கூறியவர், கலைமகள் ஆசிரியர் திரு.கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியம் அவர்கள், அன்று நான் உதவ முன்வந்தாலும், இதைச் சரியாக செய்யக்கூடியவர் டாக்டர்.ஷ்யாமா என்று எனக்கு தோன்ற, அடுத்து பெரிய "பிரஸ்மீட்'' – ஸ்ரீ சிருங்கேரி மடத்தில் (தி.நகர்) பெரிய கூட்டமாக நடைபெற்றது. பல பத்திரிகையாளர்களை அறிமுகப்படுத்தினாலும், ஷ்யாமாவிற்கும், எனக்கும் இது நடக்குமா?'' எனும் சந்தேகமும், அதெல்லாம் "இறைவன் பார்த்துக் கொள்வார்'' என்கிற எண்ணமும் மாறி மாறி ஏற்பட்டது.

இன்று ஓர் ஆல விருட்சமாக, பல குடும்பங்களோடு இணைந்து "வேதபாரதி'' தழைத்து, பல பேருக்கு நிழலாக உள்ளது என்றால் அதற்கு ஸ்ரீ காஞ்சி மடமும், ஸ்ரீ சிருங்கேரி மடமும், ஆச்சார்யர்களும் அளித்த ஆசிகள் தான்.

ஒன்பது வருடங்கள் முன்பு "வேதபாரதி பத்திரிகை'' என்று திரு.வெங்கட்ராமன்ஜி கூறிய

பொழுதும் தோன்றிய சிறு தயக்கம். முதல் பிரதியைப் பார்த்தவுடனேயே மறைந்துவிட்டது. அன்றிலிருந்து இன்று வரை அதில் வரும் ஆன்மீகக் கட்டுரைகள், பத்திரிகையின் தரம், அது பல குடும்பங்களுக்குச் சென்று சேரும் தன்மையெல்லாம் அந்த மஹாசரஸ்வதி தேவியின் கருணையல்லவா.

**“வேதபாரதி பத்திரிகை” குழுவிற்கு என் பாராட்டுக்கள் மற்றும் ஆசிகள்.**

**“வாழ்க சமூகத்திற்கு தேவையான இப்பணி வளர்க இவர்களுடைய சேவை”**

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**

## வாழ்த்துக்கள்



வேதபாரதி செய்திகள் என்ற தமிழ் மாத இதழ் தனது ஒன்பதாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இதில் ஆன்மிக செய்திகளோடு தேசநலன் சமூக நலன் சார்ந்த விஷயங்களும் வெளிவருகின்றன. பல மஹான்கள், ஆச்சார்யர்களின் அருள் வாக்குகள் தொகுத்து கொடுக்கப்பட்டு வருகின்றது. சிறு குழந்தைகள், பள்ளி மாணவர்கள், பெரியவர்கள் வரை உள்ள பல தரப்பட்ட மக்களுக்கு தகுந்தபடி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆன்மிகம், கலாசாரம், பெண்கள் சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகளை வேதபாரதி என்றஅமைப்பு நடத்தி வருகின்றது என்பது அதன் செய்திகள் மூலம் தெரியவருகின்றது. தொடர்ந்து அவர்களது பணிகள் வளரவும், இந்த இதழ் மேலும் மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்.

**காந்தாமணி நாராயணன்**

## வாழ்த்துக்கள்



*"மாதந்தோறும் நூல்" எனத் தனது பணியை இடையறாமல் தொடர்ந்து பீடு நடை போடுகிறது வேதபாரதி, ஒரு பணியை தொடர்ந்து செய்ய நினைப்பவர்கள் சிலர்தாம், செய்து முடிப்பவர்கள் அரிதாக வெகுச்சிலரே, அவ்விதம் வேதபாரதியின் நல்முத்து செய்திகள் வாசகர்களை சென்றடைய அயராது உழைக்கும் சூரியநாராயண மாமா அவர்களுக்கு வணக்கத்துடனும், வாழ்த்துக்களுடனும் கீழ்க்கண்ட கவிதை சமர்ப்பணம். (கலை சிற்பியாக மாமாவின் கைவண்ணம் நாம் அனைவரும் அனுபவித்து மகிழ்ந்த ஒன்று. எனவே அவரை "வேதபாரதி செய்திச் சிற்பியாக" பாவித்து விரிகிறது இக்கவிதை.*

## 80 – ல் 100 / 100

*"ஒரு நிமிடம் உங்களோடு" எனத் துவங்கி வேதபாரதி கோவிலில் "சூரிய ஒளி வெள்ளமென" கொலு வீற்றிருக்கும் "செய்திகள்" அச்சுப்பதிப்பாய் தாங்கள் செதுக்கும் சனாதன விவரங்கள் ஒன்றா? இரண்டா??... தொடர்ந்து நூறு இதுவே 80-ல் தாங்கள் காணும் 100/100.*

வணக்கத்துடன்
**பூர்ணிமா நந்தலாலா**
*மனநல ஆலோசகர்.*

## ‘பெருமை மிக்க ஒன்பது”

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)



எண்களில் சிறப்பு மிக்க எண் ஒன்பது! ஒன்பது என்பதற்கு நீண்ட வாழ்வு என்பது பொருள்! தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினம் ஆகியவற்றின் சுத்தத்தை 999 என்றே குறிப்பிடுவர். பெண்களின் கர்ப்பம் பூரணமாவது ஒன்பதாம் மாத நிறைவில் தான். ஒன்பதை வடமொழியில் நவம் என்று கூறுவர். இதற்கு புதுமை என்பது பொருளாகும். மேலும் ஒன்பதின் சிறப்புகளையும் பார்ப்போம்.

1. நவசக்திகள் : வாமை, ஜேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப் பிரமதணி, சர்வபூததமனி, மனோன்மணி.

2. நவதீர்த்தங்கள் : கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, சரயு, நர்மதை, காவிரி, பாலாறு, தாமிரபரணி.

3. நவ அபிஷேகங்கள் : மஞ்சள், பஞ்சாமிர்தம், பால், நெய், தேன், தயிர், சர்க்கரை, விபூதி, சந்தனம்.

4. நவரசம் : இன்பம், நகை, கருணை, கோபம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம், சாந்தம்.

5. நவக்கிரகங்கள் : சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது.

6. நவமணிகள் : கோமேதகம், நீலம், வைரம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம்.

7. நவலோகம் : பொன், வெள்ளி, செம்பு, பித்தளை,

ஈயம், வெண்கலம், இரும்பு, தரா, துத்தநாகம்.

8. நவதானியம் : நெல், கோதுமை, பாசிப்பயிறு, துவரை, மொச்சை, எள், கொள்ளு, உளுந்து, கொண்டைக்கடலை.

9. அடியார்களின் நவகுணங்கள் : அன்பு, இனிமை, உண்மை, நன்மை, மென்மை, சிந்தனை, காலம், சபை, மௌனம்.

10. நவநிதிகள் : சங்கம், புதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குன்றம், நீலம், வரம்.

11. நவகுண்டங்கள் : யாக குண்டங்கள் ஒன்பது, சதுரம், யோனி, அர்த்த சந்திரன், திரிகோணம், வட்டம், அறுகோணம், பத்மம், எண்கோணம், பிரதானவிருத்தம்.

12. நவவிதபக்தி : சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்கியம், ஆத்ம நிவேதனம்.

13. நவபாஷாணம் : வீரம், பூரம், ரசம், ஜாதிலிங்கம், கண்டகம், கவுரி, பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், சிலாஜத், மிருதர்சிங்.

14. நவதுர்க்கா : சித்திதத்ரி, கஷ்முந்தா, பிரம்மாச்சாரணி, சைலபுத்ரி, மகாகௌரி, சந்திரகாந்தா, ஸ்கந்த மாதா, மகிஷாசுரமர்த்தனி, காளராத்ரி.

15. நவசக்கரங்கள் : (நவ ஆவரணங்கள்)

த்ரைலோக்ய மோகனசங்கரம், சர்வசாபுரகசங்கரம், சர்வ சம்மோகன சக்கரம், சர்வ சௌபாக்ய சக்கரம், சர்வார்த்த சாதக சக்கரம், சர்வ

*ரக்ஷாகர சக்கரம், சர்வ ரோஹஹர சக்கரம், சர்வ சித்திப்ரதசக்கரம், சர்வானந்த மய சக்கரம்.*

*ஸ்ரீ கிருஷ்ணருக்குரிய பிரியமான மாதம் மார்கழி. இது ஆண்டின் ஒன்பதாவது மாதம். ஸ்ரீராமர் பிறந்தது ஒன்பதாவது திதியான நவமி. இவ்வாறு பல சிறப்புகள் கொண்டது ஒன்பது.*

ஒன்பதாம் ஆண்டு காணும் வேதபாரதி செய்திகள் மேலும் பல புதுமைகள் படைத்து நலம் பல செய்திட வேதமாதாவின் திருவடிகளை வேண்டுகிறேன்.

**செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்.,**
**பரமக்குடி**

---

## புத்தக ஆதரவாளர்களின் வாழ்த்துக்கள்

## வாழ்த்துக்கள்

*வேதம் நமக்கு சொல்லும் அறிவுரை : பகவானை நேசிப்பதை விட பகவான் உன்னை நேசிக்கும் படி நடந்து கொள். (தைத்திரீய ஸம்ஹிதை) வேதாத்தியனம் செய்வதும் வேதம் கற்றுத் தருவதும் தபஸ் ஆகும். இந்த உன்னதமான யக்ஞத்தை கடந்த ஒன்பது ஆண்டுகளாக தனது முழு மூச்சாக நடத்தி வரும் வேதபாரதி தன் சீரிய தொண்டினை மேலும் மேலும் சிறப்புடன் செய்திட அடியேன் வணங்கும் பராசக்தியை பிரார்த்தித்து கொள்கிறேன்.*

**தேதியூர் வி.ஜா.ராமன்**
*ஆத்மார்த்த ஜோதிடர்.*

## வாழ்த்துக்கள்

ஸ்ரீ பரமாநந்த பாரதி ஸ்வாமிகளால் துவக்கப்பட்ட வேதபாரதி தழைத்து ஓங்கி 9-ம் ஆண்டு நிறைவு பெறுவது பரவசத்திற்கு உரியது. வேதம்தான் நம் உயிர் மூச்சு. அதை பாமரனும் புரிந்து கொள்ளும் விதத்தில் ஒரு அரிய பொக்கிஷத்தை பல்வேறு இன்னல்களுக்கும், சிரமத்திற்கும் இடையே பெரும் முயற்சியால் வெற்றிநடை போட செய்திருப்பது பாராட்டிற்கு உரியது.

நமது கலாசாரத்தையும், பண்பையும் பாதுகாப்பது நம் கடமை.

புனித பாரதத்தின் 75-ஆம் ஆண்டு நினைவுகளை, முதன்முதலில், தியாகிகளையும், தேசபக்தர்களையும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் செந்தமிழ் வேந்தன் ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் அவர்களின் வீரமிகு, உணர்ச்சி மிகு சொற்பொழிவுகளைப் பற்றி விவரிக்கவும் வேண்டுமோ.

டாக்டர் சியாமா அவர்களின் கட்டுரைகளும், காந்தலக்ஷ்மியின் கட்டுரைகளும் சீரிய தரத்தில் உண்டு.

உழைக்கும் உள்ளங்கள் கொண்ட வேதபாரதிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**Dr. K. நடராஜன்,** தலைவர்
ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம மண்டலி,
திருப்பூர்.

## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

*8/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 85.*
*போன் : 044 – 2447 4744*

*வேதபாரதி அமைப்பு கடந்த 8 ஆண்டுகளாக வேதபாரதி செய்திகள் என்ற ஆன்மீக புத்தகத்தின் மூலம் உயர்ந்த கருத்துக்களோடு நல்ல சிந்தனையை விதைக்கும் செயலை செய்து வருகிறது. வேதபாரதி அமைப்பு இந்த புத்தகப் பணியினை சீரோடும் சிறப்புடனும் நடத்திட ஸ்ரீ மஹாமேரு மண்டலி ஸ்ரீ பரா பட்டாரிகா ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் பரிபூரண அனுக்ரஹம் வேண்டி ப்ரார்த்திக்கிறது.*

---

## ஸ்ரீ ஸத்வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், வேளச்சேரி வாழ்த்துரை

*வேதபாரதி பாரதப்பண்பாட்டு அமைப்பு வேதபாரதி செய்திகள் பத்திரிக்கையினை தொடர்ந்து 8 ஆண்டுகளாக ஆச்சார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் நடத்தி வருகிறார்கள். வேதபாரதி அமைப்பு நடத்திவரும் பண்பாட்டு பயிற்சி வகுப்புகள், வேத வகுப்புகள், திருப்பாவை, திருவெம்பாவை குறித்து புத்தகத்தில் தொடர்ந்து வருவது பாராட்டிற்குரியது. கிட்டத்தட்ட 100 மாதங்கள் தொடர்ந்து பத்திரிக்கை வெளிவர பொறுப்பெடுத்து நடத்திய ஸ்ரீமான் சூரிய நாராயணன் ஒரு தவமாக செய்துள்ளார். வேதபாரதி குழுவினருக்கு ஸத்வித்யா ஸ்தானம் தனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிக்கிறது.*

*லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து*

**L. முனீஸ்வர சாஸ்திரிகள்.**

# அண்ணாமலை சேரிடபுள் ட்ரஸ்ட் வாழ்த்துரை

*வேதபாரதி இதழ் 9-ம் ஆண்டில் அடி எடுத்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி. நம் ஹிந்து தர்மத்தில் நம் குழந்தைகளுக்கு கடந்த மூன்று தலைமுறைகளாக நாம் கற்றுக்கொடுக்க தவறவிட்டதை வேதபாரதி இதழ் தற்போது அனைவருக்கும் கொண்டு சேர்க்கிறது. ஒவ்வொரு மாதமும் அட்டைபட விளக்கம், மாதாந்திர விசேஷங்கள், ஸ்ரீமத்பாகவதம், பகவத் கீதை, ஆதிசங்கரர், காஞ்சி மஹா பெரியவா, சிருங்கேரி மஹா பெரியவா ஆகியோரின் ஹிந்து தர்மம் குறித்த தகவல்கள் வெளியிட்டு வருகின்றனர். வேதபாரதியின் வழிகாட்டி பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதியின் ஹிந்து தர்மம் பற்றி விளக்கங்கள் இடம் பெறுவது சிறப்பாக உள்ளது. குழந்தைகளுக்கான போட்டி, பெரியவர்களுக்கு வருடாந்திர சந்திப்பு முகாம் நடைபெறுகிறது. வேதபாரதி இதழ் மேன்மேலும் வளர்ந்து பல தலைமுறைகளுக்கு வழிகாட்ட வேண்டும் என மஹா பெரியவாளை பிரார்த்திக்கிறேன்.*

**S. ஸ்ரீதர்,** *நிர்வாகி*
*அனாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்,*
*நிர்வாகி ஸ்ரீ லலிதா சேவா ட்ரஸ்ட்,*
*நிர்வாகி அண்ணாமலை சேரிடபுள் ட்ரஸ்ட்*

**குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,*
*ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை*
தொடர்புக்கு : **9443489129**

# பசுத்தாய் வாழ்த்துக்கள்

*வேதபாரதி செய்தி மடலுக்கு வாழ்த்துக்கள்..*

*பத்திரிகை நடத்தவது என்பது ஒவ்வொரு மாதமும் பிரசவிப்பது போல என்பார்கள். காரணம் கருவில் உருவாகி அது குழந்தையாய் பிறக்கும் வரை ஒரு தாய் எவ்வாறு கஷ்டங்களை சுமக்கிறாளோ அது போல ஒவ்வொரு மாதமும் இதழ் வெளியில் வரும் வரை பல்வேறு சிரமங்களை ஆசிரியர் வெளியிட்டாளர் ஏற்கிறார்கள். அத்தகைய சிரமங்களோடு பத்திரிகையின் நோக்கம் மாறாமல் லட்சியத்தில் நடைபோடுகிறது வேதபாரதி செய்தி மடல். தொடர் சாதனையை செய்து வரும் வேதபாரதி அறக்கட்டளைக்கு வாழ்த்துக்கள். மேலும் மேலும் வேதபாரதியின் செயல்பாடுகளும், பத்திரிகையும் வளர எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறேன்.*

**பசுத்தாய் கணேசன்,**
*ஆசிரியர், பசுத்தாய் மாத இதழ்*

*ஸ்லோக வகுப்பு குழந்தைகள் ஸ்ரீமதி நீலா முரளிதரன் செயல் திட்டத்திற்கு இணங்க விவசாயம் குறித்த கட்டுரைகளை வேதபாரதி குழந்தைகள் அனுப்ப துவங்கி உள்ளனர். விரைவில் பத்திரிகை குழுவினர் குழந்தைகளின் கட்டுரைகளை தேர்வு செய்து நம் பத்திரிகையில் பிரசுரம் செய்ய உள்ளார்கள்.*

*ஆசிரியர்.*

## சுபக்ருது வருஷம் - ஐப்பசி மாத விசேஷங்கள்
### (அக்டோபர் 18.10.2022 முதல் நவம்பர் 16.11.2022 வரை)

| | | | |
|---|---|---|---|
| 18.10.2022 | ஐ 01 | செவ்வாய் | துலா ஸ்நானம் |
| 21.10.2022 | ஐ 04 | வெள்ளி | ஏகாதசி |
| 22.10.2022 | ஐ 05 | சனி | பிரதோஷம் |
| 24.10.2022 | ஐ 07 | திங்கள் | தீபாவளி |
| 25.10.2022 | ஐ 08 | செவ்வாய் | அமாவாஸை, சூரிய கிரஹணம் |
| 28.10.2022 | ஐ 11 | வெள்ளி | சதுர்த்தி, அனுஷம் |
| 30.10.2022 | ஐ 13 | ஞாயிறு | ஸ்கந்த ஷஷ்டி |
| 04.11.2022 | ஐ 18 | வெள்ளி | ஏகாதசி |
| 05.11.2022 | ஐ 19 | சனி | ப்ரதோஷம் |
| 07.11.2022 | ஐ 21 | திங்கள் | அன்னாபிஷேகம் |
| 08.11.2022 | ஐ22 | செவ்வாய் | பௌர்ணமி |
| 12.11.2022 | ஐ 26 | சனி | சங்கடஹர சதுர்த்தி |
| 14.11.2022 | ஐ 28 | திங்கள் | ஷஷ்டி |
| 16.11.2022 | ஐ 30 | புதன் | கடை முகஸ்நானம் |

### 25.10.2022 ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே சரத் ருதௌ, துலாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து பௌம வாஸர யுக்தாயாம் சித்ரா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## சுபகிருது வருஷத்திய கிரஹணங்கள்

இந்த "சுபகிருது'' வருஷத்தில் 2 சூரிய கிரஹணங்களும் 2 சந்திர கிரஹணங்களும் சம்பவிக்க உள்ளன. இவற்றில் 1 சூரிய கிரஹணம் 30.04.2022 அன்றும் 1 சந்திர கிரஹணம் 15.05.2022 அன்று நிகழ்ந்துவிட்டன. அவை இரண்டும் இந்தியாவில் தெரியவில்லை.

இனி 25.10.2022 அன்று நிகழவுள்ள சூரிய கிரஹணமும் 08.11.2022 அன்று நிகழவுள்ள சந்திர கிரஹணமும் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் நன்கு தெரியும்.

25.10.2022 – செவ்வாய் கிழமைசூரிய கிரஹணம். அன்று அமாவாஸை கிரஹணம் ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் சம்பவிக்கிறது.

கிரஹணம் ஆரம்பம் : மாலை 05.14 மணி

மத்யமம் : மாலை 05-52 மணி

மோக்ஷம் : மாலை 06.23 மணி

25.10.2022 கிரஹணத்தன்று சென்னையில் அஸ்தமன காலம் மாலை 5.39 மணி. அதுவரைதான் புண்ணிய காலம். அன்று காலை குளித்து சந்த்யாவந்தனம் முடித்து அமாவாசை தர்ப்பணம் காலை 9.00 மணிக்கு மேல் போஜனம் கிடையாது. 26.10.2022 சூரிய உதயத்திற்கு பிறகுதான் போஜனம். கிரஹண புண்யகால தர்பணம் மாலை 5.15 மணிக்கு சித்திரை, ஸ்வாதீ, விசாகம், சதயம், திருவாதிரை ஆகிய நக்ஷத்திரகாரர்கள் ஸாந்தி செய்து கொள்ள வேண்டும்.

கிரஹண புண்ய கால பித்ரு தர்ப்பண ஸங்கல்பம் – 25.10.2022 செவ்வாய்

*ஶ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயணே சரத் ருதௌ, துலாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து பௌம வாஸர யுக்தாயாம் சித்ரா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.*

**டியர் மிஸ்டர் வாசகரே!**

*“நிழல்” - மனிதனுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு உயிர்க்கும் தேவையானது. ஒது நிழலில் ஒய்வெடுக்க நினைக்கிறோம். ஆனால், ஒய்விற்கு பின் ஒடுவதற்கும் நிழல் உதவுகிறது. ஆரோக்கியத்திற்கான, அறிவிற்கான, ஞானத்திற்கான, வம்ச விருத்திக்கான என வாழ்விற்கான பலவற்றை தன் நிழலில் தருகிறது மரம். இதனாலேயே “தரு” என அழைக்கிறது இலக்கியம்.*

*தெய்வீகமாக போற்றப்படும் மரங்கள் திருக்கோவில்களில் ‘‘ஸ்தல விருட்சமாக’’ வழிபடுகிறோம். இது பெரியோர்களின், ஞானிகளின், ரிஷிகளின் வழிகாட்டல், மரங்களைப் பற்றி அறிவோம்.*

**அடுத்த இதழ் முதல் ‘தருவின் நிழலில்....’**

*வினைப்பற்றி இனிமை பல பெறுவோம்.*

*9-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நம் வேதபாரதி தழைத்தோங்க வாழ்த்துகிறேன்.*

**- ஆதிரையன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. **சூரியநாராயணன்** பகுதி - 42

**அத்தியாயம் – 2**

**"ஸாங்கிய யோகம்"**

*சென்றமாதம் இரண்டாம் அத்தியாயத்தில் 53-ம் ஸ்லோகத்திற்கு விளக்கம் பார்த்தோம்.*

*54-ம் ஸ்லோகத்தில் அர்ஜுனன் பகவானிடம் "கேசவா, ஸ்திரமான புத்தியும், மனநிறைவும் பெற்றவனுக்கு உரிய லக்ஷணம் என்ன? அவன் எப்படி பேசுவான், எப்படி நடப்பான்? என்று கேட்கிறான். அர்ஜுனன் கேட்கும் இந்த கேள்விக்குறிய 54-ஆவது ஸ்லோகம் கீதையில் மிக கம்பீரமான ஸ்லோகம்.*

*அர்ஜுனனின் இந்த கேள்விக்கு பகவான் ஆத்மாவில் நிலைபெற்றமஹாபுருஷர்களுடைய இலட்க்ஷணங்களை அடுத்துவரும் பதினெட்டு ஸ்லோகங்களில் (ஸ்லோகம் 55 முதல் அத்தியாயத்தின் கடைசி ஸ்லோகமான 72-ஆவது ஸ்லோகம் வரை) பதில் அளிக்கிறார். இந்த பதினெட்டு ஸ்லோகங்களில் கீதையின் பதினெட்டு அத்தியாயங்களின் சாரத்தையே பிழிந்து வைத்துவிட்டார் எனலாம்.*

*இந்த பதினெட்டு ஸ்லோகங்களுக்கும்* **"ஸ்திதப்ரக்ஞ லட்ஷணம்"** *என்று பெயர். மஹாத்மா காந்தி தான் உயிரோடு இருக்கும் வரையிலும் தினமும் இந்த ஸ்லோகங்களைச் சொல்லுவாராம். இன்றும் காந்திஜியின் சபர்மதி ஆஸ்ரமத்திலும்* **"விநோபாபாவே"** *யின் ஆஸ்ரமத்திலும் நடக்கும் பிரார்த்தனை*

*கூட்டத்தில் உள்ள ஒரு பாகம்தான் கீழேவரவுள்ள 18 ஸ்லோகங்களும் இதை தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் இதயம் என்று கூட இந்த ஸ்லோகங்களைச் சொல்லாம். அவ்வளவு கம்பீரமான ஸ்லோகங்கள்*

*அர்ஜுனனுடைய கேள்வியில் முதல் பகுதிக்கு விடை :*

**ஸ்ரீ பகவானுவாச = (ஸ்ரீபகவான் சொன்னது)**

**ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த்த2 மனோகத3தாந்/**

**ஆத்மந்யே வாத்மநா துஷ்ட: ஸ்தி2தப்ரஜ்ஞஸ்ததோ3ச்யதே//**

*(கீதை 2-55)*

**பொருள் :** *அர்ஜுனா, எப்பொழுது மனிதன் மனத்திலுள்ள ஆசைகளை எல்லாம் அறவே துறக்கிறானோ, மேலும் ஆத்மாவினால் ஆத்மாவிடமே ஆனந்தமாக இருக்கிறானோ, அப்போது அவன்* **"ஸ்திதப்ரக்ஞன்"** *என்று கூறப்படுகிறான்.*

**விளக்கம் : ஸ்திதிப்ரக்ஞன்** *என்றால்* **"நிலைத்த மதியுடையவன்"** *என்று பொருள். அவன் துன்பம் வரும்போது கலக்கம் அடையமாட்டான். இன்பம் வரும்போது அதைப் பற்றிக்கொண்டு நிற்கமாட்டான். ஆசை, கோபம் முதலான புலன் உணர்சசிகள் அவனை விட்டு அகன்றிருக்கும். நுகர்ச்சிப் பொருட்கள் தரவல்ல உணர்ச்சிகளில் மனம் செல்லாது அடங்கி இருக்கும். மனம் நிலை பெற்றதாய் இருக்கும். அவன் புலனடக்கமே உருவானவன்.*

*ஆற்றின் மேல்பாகத்தில் ஓடும் நீர் சலசலத்துக்கொண்டே ஓடும். ஆற்றின் ஆழத்திலும் நீர் ஓடிக்கொண்டேதான் இருக்கும். ஆனால் அந்த*

ஓட்டத்தில் சலனம் இருக்காது. ஆனந்த நிலையில் அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும். மனதில் காம அலைகள் வீசும்போது அதற்கு அடிப்படையான ஆத்மாவின் ஆனந்த சொரூபம் சிதறடைந்தது போன்று ஆய்விடுகிறது. காம அலைகளற்று மனது தேங்கியிருக்கும் போது ஆத்மாவின் சொரூபம் தனக்குத்தானே விளங்குகிறது. தான் உலகெல்லாம் தேடின இன்பம் தன்னிடத்தே இருக்கிறது என்று மனம் தெளிவடைபவன் **“நிறைஞானி, ஆத்ம திருப்தன்”**

கீதை தொடரும்...

## தீபாவளி வாழ்த்துக்கள்

வேதபாரதி செய்திகள் பத்திரிகை தொடர்ந்து நடைபெற நல் ஆதரவு வழங்கும் கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள் அனைவருக்கும்

**இனிய தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்**

வேதபாரதி.

## வேதபாரதியின் புத்தக வெளியீடுகள்

விரைவில்

✤ ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி எழுதிய பெற்றோர்களே கவனியுங்கள் பாகம் - 2 வெளிவர உள்ளது.

✤ புனித பாரதத்தின் 75-ம் ஆண்டு நினைவுகளை போற்றும் வகையில் தேச பக்தர்கள் பற்றி ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி அவர்களின் வீரமிகு சொற்பொழிவுகளின் தொகுப்புகளை புத்தகமாக ஸ்ரீமதி டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன் எழுதி வெளிவர உள்ளது.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 22

*பகவானின் அவதாரங்கள் தொடர்ச்சி.................*

**17. பதினேழாவது அவதாரம் = "வேத வ்யாஸர்" அவதாரம்**

*ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸ்வரூபமான ஸ்ரீ வேதவ்யாஸர் துவாபர யுகம் முடிவிலும் கலியுகம் ஆரம்பம் ஆவதற்கு முன் பராசர முனிவருக்கும். சத்தியவதி என்று மீனவப் பெண்ணிற்கும் மகனாக அவதரித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இவருடைய இயற்பெயர் "கிருஷ்ண த்வைபாயனர்". ஒரே வடிவாக இருந்த வேதத்தை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் என்று நான்காக பிரித்து உலகுக்கு ஈந்தவர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருளிய கீதையைத் தொகுத்தவர். மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் முதலிய பதினெட்டு புராணங்களை இயற்றியவர் எல்லா* **ஸன்யாசிகளுக்கும் இவர்தான் குரு. (பா 1-3-21)**

**18. பகவானின் பதினெட்டாவது அவதாரம் "ஸ்ரீராமாவதாரம்"**

*பகவான் எடுத்த அவதாரங்களில் உன்னதமான அவதாரம்* **ராமாவதாரம்''** *சத்தியம், நேர்மை, தந்தை சொற்படி நடத்தல், அன்பு ஆகியவற்றின் மொத்த உருவமாக விளங்கியவர் ஸ்ரீராமன். மூன்று முறைபகவான் மானிடராக அவதாரம் செய்துள்ளார். அதாவது வாமனர், ராமர் மற்றும் கிருஷ்ணர். இதில் ராமாவதாரம் தவிர மற்றஇரண்டு அவதாரங்களிலும் தனது கடவுள் தன்மையை வெளிப்படுத்தி இருப்பார். ராமாவதாரத்தில் மட்டுமே மனிதனாக எளிமையாக வாழ்ந்தார். (பா 1-3-22)*

**19. 20. பகவானின் பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது அவதாரம் ஸ்ரீ பலராமனும், ஸ்ரீகிருஷ்ணனும்.**

*ஸாக்ஷாத் பகவான்* **"விருஷ்ணி"** *வம்சத்தில் ராமன், கிருஷ்ணன் என்றஇரு பிறவிகளை அடைந்து பூ பாரத்தை குறைத்தார். பகவத் கீதையை உபதேசித்து உலகத்துக்கே நன்னெறி காட்டிய அவதாரம் ஸ்ரீ கிருஷ்ண அவதாரம். கிருஷ்ண அவதாரத்தில் அவர் சொன்ன செய்திகளும், வாழ்வியல் கருத்துக்களும் ஏராளம். (பா 1-3-23)*

**21. இருபத்தோராவது அவதாரமாக பகவான் எடுத்தது "ஸ்ரீபுத்தன்" அவதாரம் :**

*ஸ்ரீமத் பாகவதத்தில் புத்தரும் ஸ்ரீவிஷ்ணுவின் ஒரு அவதாரமாகவே சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பதினெட்டு புராணங்களில் மிக பழைய புராணமான லிங்க புராணத்தில் திரிபுர சம்ஹார பகுதியில் கௌதம புத்தரை மகா விஷ்ணுவின் அவதாரமாக கூறப்பட்டுள்ளது. ஆயினும் புத்தரை மஹாவிஷ்ணுவின் அவதாரத்தோடு சம்பந்தப்படுத்த பலருக்கு கொள்கை ரீதியாக ஈடுபாடு கிடையாது. "ஆசைதான் எல்லா துக்கங்களுக்கும்" காரணம் என்றமாபெரும் தத்துவத்தை உலகிற்கு போதித்தவர் ஸ்ரீபுத்தர். (பா 1-3-24)*

**22. பகவானின் இருபத்திரண்டாவது அவதாரம் இனி எடுக்கப்போகும் "கல்கி" அவதாரம் :**

*இப்போது நடந்துகொண்டிருக்கும் கலியுகத்தின் முடிவில் கலி முற்றதீமைகள் வளர, அதர்மம் தலைதூக்க அதை தொலைக்க பகவான் எடுக்கப்போகும் அவதாரம்தான்* **"கல்கி"** *அவதாரம். எப்போது, எந்த*

இடத்தில், எந்த ரூபத்தில் பகவான் கல்கியாய் அவதரிப்பார் என்பதைப்பற்றி புராணங்கள் விளக்கியுள்ளன. ஸ்ரீமத் பாகவதம், பகவான் கலி முடிவில் **"சம்பளம்"** என்றகிராமத்தில் **"விஷ்ணுயசஸ்"** என்கிறபிராமணனுக்கு மகனாக உடல் வலிமையுடன் அனைத்திலும் சிறந்த அறிவாற்றலுடன் அவதரிப்பார் என்று கூறுகிறது. (பா 1-3-25)

பகவானின் 22 அவதாரங்கள் குறித்து பார்த்தோம். பகவான் எடுத்த மொத்த அவதாரங்கள் 22 தானா? இல்லை. பகவானின் அவதாரங்கள் **"அஸங்க்யேயா ஹரி"** = எண்ணற்றவையன்றோ என்கிறது ஸ்ரீமத் பாகவதம் (பா 1-3-26). பகவான் அவ்வப்போது அவதாரங்கள் எடுத்துக்கொண்டேதான் இருக்கிறார்.

தொடரும்.....

உ

# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022

## வேதபாரதி - திருச்சி



**உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம். நவம்பர் மாதம் திருச்சியில் நடக்க உள்ள காயத்ரீ ஜப ஹோமத்தில் கலந்து கொள்ள பெயர் கொடுக்க அன்புடன் அழைக்கிறோம்.**

மேலும் தொடர்புக்கு :

**99947 35517 / 94434 53053 / 94431 43697**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 4 அவதார மஹிமை பாகம் 13**

## அத்தியாயம் – 4
## தாயைக் காத்த தனயன்

மூன்று வருடங்கள் குருகுலத்தில் தங்கி வேதங்களைக் கற்ற ஸ்ரீசங்கரன் தன்னுடைய எட்டாவது வயதில் தன் இல்லம் திரும்பினான். கணவனை இழந்த தன்னுடைய அம்மா தன்னையும் மூன்று ஆண்டு காலம் பிரிந்து இருந்ததால் மிகவும் நொடிந்து போயிருந்தாள். தாயின் கால்களில் விழுந்து நமஸ்கரித்த சங்கரன் அன்று முதல் தாயாருக்கு வேண்டிய எல்லா பணிவிடைகளையும் செய்ய ஆரம்பித்தான். தாயை எல்லா கோயில்களுக்கும் அழைத்துக் சென்றான்.

கணவரைப் பிரிந்த ஆர்யாம்பாதேவி மிகவும் நிஷ்டையுடன் வாழ்ந்துவந்தார். தினமும் விடியற்காலையில் எழுந்து வெகு தூரத்தில் ஓடும் நதியில் குளித்துவிட்டு வரும் வழியில் விஷ்ணுகோயிலுக்குச் சென்று தொழுது தவம் செய்வார். அப்படி இருந்தாலும் அவருக்கு மனதுக்குள் “சங்கரனை எனக்கு அளித்த அந்த வடக்குநாதனை ஒரு நாளாவது பார்த்து தொழவேண்டுமே” என்ற ஆவல் இருந்தது. ஒரு நாள் நதியில் குளித்துவிட்டு வரும்போது தூரத்தில் ஒரு வெள்ளை மான் துள்ளி குதித்து விளையாடுவதைப் பார்த்தாள். அந்த மானை அருகில் பார்ப்பதற்காக அது இருந்த திசை நோக்கிச் சென்றாள். அருகில் சென்றதும் அந்த மான் மறைந்துவிட்டது.

ஆனால் அந்த மான் இருந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் இருந்தது. தான் விரும்பிய அந்த வடக்குநாதனே இங்கு எழுந்தருளியிருக்கிறார் என்று நினைத்து பகவானை அங்கே நமஸ்கரித்தார். அந்த இடத்தில் ஒரு கோயில் எழுப்பப்பட்டது. அந்த சிவன் கோயிலுக்கு **“திருவெள்ளைமான் துள்ளி”** என்று பெயர்.

இன்றும் இந்தக்கோயில் காலடிக்கு மேற்கே இரண்டு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

ஆர்யாம்பாள் தேவி தினமும் வெகு தூரத்தில் உள்ள பூர்ணா நதிக்குச் சென்று குளித்துவிட்டு கோயிலுக்கும் போய் உபவாசம் இருப்பதால் அவரின் உடல் மிகவும் இளைத்துவிட்டது. ஒரு துவாதசி நாளன்று அவர் பூர்ணா நதியில் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்த போது களைப்பால் தலைசுற்றி மயக்கமாக கீழே விழுந்துவிட்டார்.

வெகுநேரம் ஆகியும் வீடு திரும்பாத தாயைத் தேடிச்சென்ற சங்கரன் ஒரு இடத்தில் தாய் விழுந்துகிடப்பதைப் பார்த்து தாயை வீட்டிற்கு அழைத்து வந்தான். அவன் தாயிடம் ‘அம்மா இனி நீங்கள் குளிப்பதற்காக வெகு தூரத்தில் உள்ள பூர்ணா நதிக்குச் செல்ல வேண்டாம். அந்த பூர்ணா நதியே நம் வீட்டின் அருகிலேயே வருவாள்” என்றான். அதைக்கேட்ட ஆர்யாம்பாள் தன் குழந்தை பாசத்தால் அப்படி கூறுகிறான் என்று நினைத்து அவனைப்பார்த்து மெல்ல சிரித்தாள்.


**திருவெள்ளைமான் துள்ளி சிவன் கோயில்**

அன்று இரவு மிக பயங்கர இடி மின்னலுடன் மிகப்பெரிய மழை பெய்தது. ஒரு இடி பூர்ணா நதிக்கு அருகில் இருந்த மலையில் விழுந்ததால் ஒரு மிகப் பெரிய பாறை இடிந்து பூர்ணா நதியில் விழுந்தது. அதனால் நதியின் ஓட்டம் தடைபட்டு அது புதிய வழியில் ஓடத்துவங்கியது. அப்படி வந்த நதி ஆர்யாம்பாள் வீட்டின் பின்பக்கமாக ஓடியது. நடு இரவில் பயங்கர இடிச்சத்தம் கேட்டதால் ஊர் மக்கள் பயத்தில் இங்கும் அங்கும் ஓடினார்கள். சத்தம் கேட்டு ஆர்யாம்பாளும் அவருடைய பந்துக்களும் வெளியே வந்து பார்த்தார்கள். வயல்கள், வீதிகளும் வெள்ளக்காடாய் காட்சி அளித்தது. யாரோ சிலர் ‘பூர்ணா நதி வழி மாறி ஓடுகிறது’’ என்று கூச்சலிட்டார்கள்.

ஆர்யாம்பாள் வீட்டின் உள்ளே ஓடி வந்து குழந்தை சங்கரனைப் பார்த்தாள். அவன் ஏதும் தெரியாமல் தூங்கிக்கொண்டிருந்தான். அவளுக்கு நேற்று சங்கரன் தன்னிடம் ‘அம்மா இனி நீங்கள் குளிப்பதற்காக வெகு தூரத்தில் உள்ள பூர்ணா நதிக்குச் செல்ல வேண்டாம். அந்த பூர்ணா நதியே நம் வீட்டின் அருகிலேயே வருவாள்’ என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. சங்கரனைப் பார்த்து ‘நீ யாரப்பா? ஸாக்ஷாத் அந்த பரமேஸ்ரன்தானே? என்று மனதுக்குள் கூறினாள்.

இந்த விஷயம் குறித்து ஆர்யாம்பாளும் யாரிடமும் கூறவில்லை. சங்கரனும் எதையும் காண்பித்துக் கொள்ளவில்லை.

தொடரும்..

உ

ஸ்ரீ மாத்தம்மா சரணம்

# ஆலயம் செய்வோம் வாருங்கள்



"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று நம் முன்னோர்கள் சொன்னதை, சற்றேமாற்றி "கோவில் இல்லாத மதத்தில் குடியிருக்க வேண்டாம்'' என்று முடிவெடுத்து விட்டார்கள் இன்றைய தலைமுறையினர் ஒரு அழகிய கிராமத்தில் "எங்கள் குல தெய்வம் ஸ்ரீ மாத்தம்மாவுக்கு சிறு கோவில் கட்டித்தாருங்கள், எங்கள் பிள்ளைகளை அவள் காலடியிலேயே இருக்கச் செய்யுங்கள். எங்கள் கண்கள் மூடுவதற்கு முன்பாக எங்கள் தெய்வம் இங்கே குடியேறவேண்டும். கருணை காட்டுங்கள்'' என்று கண்கள் கலங்கிய மூதாட்டிகள் கையெடுத்து கும்பிட்டுக் கேட்கிறார்கள். சுற்றிலும் அந்த ஊர் இளைஞர்கள்.

"**சீதா ராம் பேட்டை**, ஊத்துக்கோட்டை அருகே அழகிய கிராமம். கோவில் இல்லாத குடியிருப்பு, சமூகப் பிரச்சனைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட, மிகவும் பின்தங்கிய மக்களின் நியாயமான கோரிக்கை. அந்த மாத்தம்மாவையே வேண்டிக்கொண்டு, சில நல்ல நண்பர்களுடன் இறங்கிவிட்டேன். இந்த பொது கைங்கர்யத்தில் உதவ மனம் கொண்டவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஷ்யாமா ஸ்வாமிநாதன்,**

போன் : 2447 0651, செல் : 9941387193

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

**48625585 / 9840545585**



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்



**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின்**
**துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**

There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**



**கொடுப்பவர்களுக்குத் தெரியாது, கேட்பது கடவுள் என்று... கேட்பவர்களுக்கு தெரியும், கொடுப்பது கடவுள் என்று...**

அடையாறு கேன்சர் மருத்துவ மனைக்கு சிகிச்சை பெற வரும் ஏழை புற்றுநோயாளிகள் நமது அன்புக்கும், அரவணைப்பிற்கும் உரியவர்களே. அவர்களுக்கு நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை உணவு; தங்குமிடம் ஆகியவை **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தடையற்ற சிகிச்சை பெற்று விரைவில் புற்றுநோயிலிருந்து விடுபடுகிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளின் உயிர் காக்கும் இந்த உயரிய சேவைக்கு உதவிடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்.


**விஸ்வாஸ் சாரிடபள் டிரஸ்ட்** நிறுவனர் **திரு T.J.ஸ்ரீதர்** அவர்கள், நம்ம தர்மசாலாவில் தஞ்சமடைந்துள்ள ஏழை புற்றுநோயாளிகளின் பசி தீர்க்க நன்கொடையாக ரூ.1,00,000/- காசோலையை தங்களிடம் வழங்கச் சொன்னதாக, **திருமதி நந்தினி** அவர்கள் நமது நிர்வாக அறங்காவலர் அவர்களைச் சந்தித்து வழங்கி

மகிழ்ந்தார். மேலும், திரு ஸ்ரீதர் அவர்கள், அவரது நண்பரும் ஆடிட்டருமான **திரு சேகர்** அவர்களின் அறிவுறுத்தலின்படியே இந்த நன்கொடையை ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு வழங்கியதாக தொலைபேசி வாயிலாக நமது நிர்வாக அறங்காவலர் அவர்களிடம் தெரிவித்தார். மேகங்கள் திரண்டு மழையாக பொழிவதைப் போல் நல்லவர்கள் ஒன்று கூடி மனிதநேய மழையாக இந்த நல்ல கார்யத்திற்கு உதவுகிறீர்கள். நீங்களும் உங்கள் நண்பர் திரு சேகர் அவர்களும் அவசியம் நம்ம தர்மசாலாவிற்கு ஒரு நாள் வர வேண்டும், ஏழை புற்று நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தை கூற வேண்டும் என்கிற வேண்டுகோள் விடுத்து, நன்றி கூறி மகிழ்ந்தார். இந்த நல்ல கார்யத்தில் அங்கமாக இருப்போரும், அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் நூறாண்டுகள் நலமுடன் வாழ இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.



செங்கல்பட்டு – மாமண்டூர் கிராமத்தில், ஆதரவற்ற ஏழை முதியவர்களுக்காக நாம் செயல்படுத்தவிருக்கும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிட அனுமதி வழங்குவதற்காக நமது நிலத்தில் துறை சார்ந்த அதிகாரிகளின் நேரடி ஆய்வு நிறைவடைந்துள்ள நிலையில், துறை சார்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்களின்படி கட்டிட அனுமதிக்கான கட்டணமாக சுமார் 20 லட்சம் ரூபாய் முறையாகவும், முழுவது மாகவும் 17.6.2022 அன்று செலுத்திவிட்டு, கட்டிட அனுமதிக்காக இன்றுவரை காத்திருக்கிறோம். அதன்படி, கட்டிட அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் நமது இலவச முதியோர்

முதியோர் தங்கும் அறை வரைபடம்



இல்ல கட்டிட பணிகள் முழு வீச்சுடன் நடைபெறும். வறுமையில் வாடும் ஏழை முதியவர்களுக்காக **முற்றிலும் இலவசமாக** செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு **ரூ.5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**சிந்திப்பீர்! செயலாற்றுவீர்!!**




## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**
**vkrishnamoorthy.smt@gmail.com** **www.srimathatrust.org**


ASHHIRWAAD ASSOCIATES
Civil Engineering Contractors
Micro Piling & Soil Stabilization
Rehabilation of Structures
Valuation Works
Regn. No. 18/2000
ASHHIRWAAD ANALYTICAL LABORATORY
Soil Investigation
Material Testing
Structural Consultancy
Surveying & Contouring
NDT Services
ASHHIRWAAD ANALYTICAL LABORATORY
AAL
A Total Solution Provider in Civil Engineering
Er. Ashhirwaad Ramesh @ N.J.L. Ramesh, M.Tech., M.Sc., MBA, FIV, MICI (PhD.)
Geotech & Structural Consultant & CEO
" MAYAN VIHAR " No : 182, 4th Main Road, Mahaveer Nagar, Karuvadikuppam
Puducherry - 605 008. Tele : 0413 - 2256356, 2252663
Cell : 75984 37023, 75984 91505
E-mail : aageotech@gmail.com / www.ashhirwaadassociates.com
Mayan Vihar

# "தெரிந்து கொள்வோம்"

**"தெரிந்தது கையளவு, தெரியாதது உலகளவு"** என்பார்கள். உலகில் எல்லாம் தெரிந்தவர் என்று யாரும் இருக்க முடியாது. நமக்கு தெரிந்தது அடுத்தவருக்கு தெரியாமல் இருக்கலாம். அடுத்தவருக்கு தெரிந்தது நமக்கு தெரியாமல் இருக்கலாம். நமக்கு தெரிந்தது குறைவு நமக்கு தெரியாதது அதிகம்.

இந்த மாதம் முதல் இந்த **"தெரிந்து கொள்வோம்"** என்றஇந்த பகுதியில் சில தகவல்களை வாசகர்களுக்கு தெரிவிக்கவுள்ளோம். அது உங்களுக்கு தெரிந்தும் இருக்கலாம். தெரியாமலும் இருக்கலாம். உங்களுக்கு தெரியவில்லை என்றால் தெரிந்து கொள்ளுங்கள்.

## சென்னையில் நவக்ரஹ ஸ்தலங்கள்

**1. சூர்யத்தலம்** – கொளப்பாக்கம் : கொளப்பாக்கம் சென்னையிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், போரூர் சந்திப்பிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவிலும் உள்ளது. ராமாவரத்திலிருந்தும் இத்தலத்தை அடையலாம்.

**2. சந்திரத்தலம்** – சோமங்கலம் : சந்திரன் இங்கு தனிச் சந்நதியில் அருட்பாலிக்கிறார். இது சென்னை, தாம்பரத்திலிருந்தும், குன்றத்தூரிலிருந்தும் இக்கோயிலுக்குச் செல்லலாம். இரண்டு ஊர்களிலிருந்தும் பதினைந்து கி.மீட்டர் தொலைவு.

**3. செவ்வாய் தலம்** - பூவிருந்தவல்லி : சென்னை பூவிருந்தவல்லி நகரத்தின் மையத்திலேயே இந்த ஆலயம் அமைந்துள்ளது.

**4. புதன் தலம்** – கோவூர் : சென்னை போரூரில் இருந்து குன்றத்தூர் செல்லும் வழியில் 5 கி.மீ. தொலைவில் கோவூர் அமைந்துள்ளது.

**5. குருதலம்** – போரூர் : போரூர் சந்திப்பிற்கு அருகில்

குன்றத்தூர் மின்வாரிய அலுவலகத்தைக் கடந்து இடதுபுறம் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

**6. சுக்கிரன் தலம்** – மாங்காடு : இத்தலம் மாங்காடு காட்சி அம்மன் கோயிலுக்கு வெகு அருகில் உள்ளது.

**7. சனி தலம்** – பொழிச்சலூர் : சென்னையை அடுத்த பல்லாவரத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் பொழிச்சலூர் எனும் ஊரில் உள்ளது இக்கோயில்.

**8. ராகு தலம் :** தாம்பரம், கோயம்பேடு, பூவிருந்தவல்லியிலிருந்து குன்றத்தூருக்கு பேருந்து வசதிகள் உள்ளன.

**9. கேது தலம்** – கெருகம்பாக்கம் : சென்னை, போரூர்– குன்றத்தூர் பாதையில் கெருகம்பாக்கத்தில் உள்ளது. இந்த ஆலயம் போரூர் சந்திப்பில் இருந்து 3 கி.மீ. தொலைவு.

வாசகர்கள் விரும்பினால் ஒவ்வொரு கோயில் குறித்தும் முழு விவரங்கள் தெரிவிக்கப்படும்.

தொகுப்பு : **செங்கதிரோன்**


ஹரி:ஓம்

**வேதபாரதி** வழங்கும்

# பெண்மையைப் போற்றுவோம்

**பெண்களால் பெண்களுக்குக்காக நடத்தப்படும் யுவஸ்ரீ பயிலரங்கம்**

**தலைப்பு: பாரம்பரிய பழக்கங்களில் நம் பெருமைமிகு விஞ்ஞானம்**

**12 வயதுக்கு மேல் உள்ள பெண்குழந்தைகளும், பெற்றோர்களும் கலந்து கொள்ளுங்கள்.**

பிரதி மாதம் கடைசி ஞாயிறு மாலை 6.00 மணி

**தொடர்புக்கு**

**94434 95950 / 63835 20978**

## ஔவையார்

*ஔவையார் குழந்தைகளுக்காக* **“ஆத்திசூடி, கொன்றைவேந்தன்”, நாலடியார் ’மூதுரை” நல்வழி”** *போன்றநீதி நூல்களைப் பாடியுள்ளார். இவற்றில் வாசகர்களுக்காக* **“நாலடியார்” “நல்வழி”** *ஆகியவற்றின் பாடல்களை* **“வேதபாரதி செய்திகள்”** *புத்தகத்தின் 8ஆம் ஆண்டுவரை வழங்கினோம்.*

**“வேதபாரதி செய்திகள்”** *ஒன்பதாம் ஆண்டு அடி எடுத்து வைக்கும் இந்த மாதம் முதல் (அக்டோபர் 2022) ஒவ்வொரு மாதமும் “மூதுரையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடல்களை இந்த பகுதியில் வாசகர்களுக்காக வழங்கவிருக்கிறோம்.*

**“மூதுரை”** *= முதுமை + உரை = மூதுரை. பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* **“மூதுரை”** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

*“இந்த மாதம் முதல் “மூதுரை” யிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் அர்த்தத்துடன் இந்த பகுதியில் அளிக்கப்படும். முதலில் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிப்போம்.*

**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு.**

**பொருள் :** *இந்தப் பாடலின் பொருளை சாதாரணமாக பார்க்கும் போது “விநாயகப் பெருமானை தினமும் துதித்து அவர் பாதம் சரணடைபவர்க்கு நல்ல வாக்கு வன்மையும், திடமான மனோபலமும், மஹாலட்சுமியின் கடாக்ஷமும், உடல் பலமும் கிடைக்கும் என்றுதான் பொருள்படும்.*

ஆனால் பண்டைய தமிழ் வைத்திய முறையில் இப்பாடலுக்கு வேறு ஒரு விளக்கம் சொல்லுகிறார்கள்.

**“மாமலராள் பூக்கொண்டு”** என்பது “தாமரை” பூவைக் குறிக்கிறது.

**“மேனி”** என்பது “குப்பைமேனி” இலையைக் குறிக்கிறது.

**“தும்பி”** என்பது “தும்பை பூ”

**“கையான்”** என்பது கையான்தகரை = **“கரிசலாங்கண்ணி”** கீரையை குறிக்கிறது.

**“பாதம்”** என்பது **“செருப்படை”** என்றஒரு மூலிகையைக் குறிக்கிறது.

இந்த ஐந்து மூலிகைகளையும் **“பஞ்ச பூத மூலிகை”** என்பார்கள். இவற்றில் செம்பு, இரும்பு, ஈயம் போன்ற சத்துக்கள் உள்ளன. இவற்றை உட்கொண்டால் நரை, மூப்பு, பிணி அணுகாது, நீண்ட ஆயுளுடன் வாழலாம் என சித்தர்கள் கூறியுள்ளார்கள். இந்தப் பாடலில் இறைவழிபாடும், உடல் நலமும் ஒன்றாய் அமைந்துள்ளது.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

பிரதி மாதம் வேதபாரதி செய்திகள் புத்தகத்தில் ஒளவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி பாடலும், பாடலின் பொருளும் பதிப்பித்து வருகிறோம். பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லி கொடுத்து நம் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டுகிறோம்.


- ஆசிரியர்.

# அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *63/1*

**"வேதபாரதி செய்திகள்"** ஒரு ஆன்மிக மாத இதழ். இதில் வாசகர்களுக்கு ஆன்மிக செய்திகளையும், கட்டுரைகளையும் அளிக்க வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம். **வேதபாரதி செய்திகள்** புத்தகம் 9ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும். இந்த மாதம் முதல் (அக்டோபர் 2022) வாசகர்களுக்காக 63 நாயன்மார்கள் குறித்து மாதம் ஒரு நாயன்மார் என்று அவர்களுடைய வாழ்க்கை முறை குறித்தும் மற்ற விவரங்களும் இந்த பகுதியில் அளிக்க இருக்கிறோம்.

பெரிய சிவாலயங்களின் சுற்றுப்பிரகாரங்களில் 63 நாயன்மார்களின் சிலைகள் வைக்கப்பட்டிருக்கும். பெரிய புராணம் என்னும் நூலில் குறிப்பிடும் சைவ அடியார்கள்தான் இவர்கள். நாயன்மார்களில் ஒரு சிலர் மட்டுமே சமயநூல்களில் புலமை பெற்றவர்கள். மற்றவர்கள் மிகச்சிறந்த பக்தர்கள் மட்டுமே. அறுபத்தி மூன்று நாயன்மார்களில் மூன்று பெண்களும் இடம் பெறுவர்.



**1. திருநீலகண்ட நாயனார்**

இவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சிதம்பரத்தில் ஒரு குயவர் குலத்தில் பிறந்தவர். சிதம்பரத்தில் உள்ள சிவனிடம் மிகுந்த பக்தியும் பேரன்பும் கொண்டிருந்தார். இவர் குயவர் ஆகையால் மண்ணிலிருந்து திருஓடுகள் தயார் செய்து சிவனடியார்களுக்கு கொடுப்பதை தொண்டாகச் செய்துவந்தார்.

இவருடைய மனைவியும் சிவனிடத்தும் சிவனடியார்களிடமும் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். ஒரு நாள் திருநீலகண்டர் ஒரு தாசியிடம் சென்று வந்ததை அறிந்த அவர் மனைவி இறைவன்மீது ஆணையிட்டு ஒருவரை ஒருவர் தொடாமல் வாழ்ந்துவந்தனர். தன் கணவரைத் தீண்டுவதை தவிர்த்து வந்தார். இருந்தாலும் மனைவியின் கடமைகளைச் செய்துவந்தார்.

தொடரும்...

99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# பலர் சொல் விளைவிக்கும் மனமாற்றம்

*சென்றமாத தொடர்ச்சி....*

*இதைப் பயன்படுத்திக் கொண்டு அந்தக் கடைக்காரன்*



*ஆடுகளுக்குப் பதிலாக நாய்களைக் கொடுத்து என்னை ஏமாற்றிவிட்டான். எனது பூர்வஜன்ம பாவத்தினால் தான் ஆடுகளுக்குப் பதிலாக நான் நாய்களை இழுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. வெட்கக்கேடு! என்று தன்னைத் தானே நொந்து கொண்டார். பிறகு மூன்றாவது ஆசாமியைப் பார்த்து, "இந்த நாய்களை நீயே எடுத்துக் கொண்டு போய்விடு. யாகசாலைக்கு நான் இவற்றைக் கொண்டு சென்றிருந்தால் என் நிலைமை என்னவாகியிருக்கும்? அதை நினைத்தாலே என் உடல் நடுங்குகிறது. யாகசாலையில் எல்லோரும் என்னை வசைச் சொற்களால் ஏசியிருப்பார்கள். உனக்கு மிக்க நன்றி. நல்லவேளையாக நீ என்னை அந்த அவமானத்திலிருந்து காப்பாற்றிவிட்டாய். இந்த நாய்களுக்காக நீ எனக்குப் பணம் எதுவும் கொடுக்கத் தேவையில்லை. இவை என்னைவிட்டுத் தொலைந்தாலே போதும்; நான் மிகவும் சந்தோஷப்படுவேன்'' என்று சொல்லி, அவ்வாடுகளை மிக்க நன்றியுடன் திருடனிடம் கொடுத்துவிட்டார்.*

*மூன்று மனிதர்கள் ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறவே, சோமயாஜியின் உள்ளம் சிறிது*

*சிறிதாக மாறுதலை அடைந்தது. கபடமான ஏமாற்று வார்த்தைகளுக்கே இவ்வளவு தூரம் ஒருவருடைய மனதை மாற்றக்கூடிய சக்தியுள்ளதென்றால், எண்ணற்ற பக்தர்கள் கோயில் சிலையின் முன்பு, மனம் உருகி வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனை - களுக்கிருக்கும் சக்தியை என்னவென்று கூறுவது? கோயில் சிலைகளுக்கு இறைவன் அளிக்கும் புனிதத்தன்மைக்கு, இத்தகைய பிரார்த்தனைகளும் ஒரு காரணமாகும்.*


**"வேதபாரதி"**

மற்றும்

**"ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் டிரஸ்ட்"**

ஆகியோர் இணைந்து வழங்கும்

**"ஔவை விழா 2022"**

போட்டிகள் நடைபெறும் நாள்

**13.11.2022, ஞாயிற்றுக்கிழமை**

**காலை 9.00 மணி**


இடம் :

**ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,**

**கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.**

தொடர்புக்கு : **7397374638 / 7397460064**

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்



## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்ற மாத தொடர்ச்சி 3-5 :*

இந்த மாற்றப்பட்ட உச்சரிப்பால், அந்த மந்திரத்தின் பொருள், பகைவனாகிய இந்திரன் வெற்றி பெறட்டும் என மாறியது. இந்திரன் வெற்றி பெற்றான்; த்வஷ்ட்ரன் கொல்லப்பட்டான். இவ்வாறு, பொருள், உச்சரிப்பைப் பொருத்து அமையும் இன்னும் சில இடங்கள் வேதங்களில் உள்ளன. இந்த நிலை எல்லா இடங்களிலும் இல்லை. இத்தகைய இடங்களில், சங்கீதத்துவம் மேற்சொன்ன நியாயமான காரணத்திற்காகக் காப்பாற்றப்பட்டதென்றால், அதிலொன்றும் மர்மம் இல்லை. அது நியாயமானதே. ஆனால், ஸ்வரம் பொருளைப் பாதிக்காத ஒவ்வொரு இடத்திலும் கூட நினைவுக்கு அப்பாற்பட்ட காலமாகச் சங்கீதத்துவம், காப்பாற்றப்பட்டு வருகிறதென்றால், அது மனிதனால் எழுதப்பட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்? அவ்வாறு இருக்க முடியாது.


**3.6 வேதங்களின் விஸ்தாரம் :**

மேற்சொன்ன முடிவுக்கு வருவதற்கு இன்னுமொரு காரணம் உள்ளது. வேதங்கள், நாம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு விஸ்தாரமானவை, பரந்தவை. இதை, ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.

தொடரும்..

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## சமூக சேவை



சமூக சேவை உண்மையாக இருக்க வேண்டுமாகில் சேவை செய்கிறவர்களுக்கு தர்மத்திலும், சத்தியத்திலும் தளராத பிடிப்பு இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயம் என்பதே கூடாது. பயமற்றநிலை வேறு; ஹிம்ஸை வழியில் நடப்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக்கூடாது. யுவர்களுக்கெல்லாம் உதாரணமாக இருப்பவர் ஆஞ்சநேய ஸ்வாமி. சாந்தராக இருந்தார். கோபித்து எழவேண்டிய சமயத்தில் மஹாவீரராக எழும்பி ஹதாஹதம் செய்தார். அவருடைய புத்திபலம் பெரிது. ஆயினும் பக்தியில் தோய்ந்து அடக்கத்துடன், விநயமே ஸ்வரூபமாகச் சேவை செய்து கொண்டிருந்தார். பயமென்பதே அவருக்கு இல்லை. ஆனாலும், தாமாக ஹிம்ஸை வழியில் அவர் சென்றதில்லை.

தொடரும்...

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 22

*"பொறுப்பு" என்பதை கற்றுத்தருவது எந்த வயதில் என்று புரிந்து கொள்ள "பெற்றோர்களே கவனியுங்கள்" புத்தகம் – 1 மற்றும் புத்தகம் - 2 வாங்கிப் படியுங்கள். வேதபாரதிக்கு கேள்விகளை அனுப்புங்கள்.*

*பொதுவாகக் குழந்தைகளை வளர்க்கும் பொழுது பெற்றோர்களிடையே ஒருவித குழப்பம் ஏற்படும். அவர்கள் கேள்விகள் கேட்டு, பதில்களை நக்கலும், கிண்டலுமாக அளித்து, அதே நக்கலை அக்குழந்தைகள் மற்றவர்கள் எதிரில் வெளிப்படுத்தும் பொழுது திட்டி, "ஏண்டா, இப்படியா பேசறது?" என்று கூறும் பொழுது, அக்குழந்தைக்கு மட்டும் அறிவு வளர்ச்சியிருந்தால், "நேற்று நீ பேசியது தானே நான் இப்போது பேசறேன்" என்று கூறும்.*

*எங்கே, எப்படி, எப்பொழுது, எவ்வகையில் யாரோடு பேச வேண்டும் எனும் பொறுப்பு பெண் குழந்தைகளுக்கு 15-16 வயதிலும், ஆண் குழந்தைகளுக்கு 18-19 வயதிலும் புரியத்துவங்கும். இதை ஒரு அடி கோலாக கொள்ளலாமே தவிர இது அளவுகோல் அல்ல. குழந்தையின் பின்னணி, வீட்டுச் சூழல் போன்றவை ஓர் "சுயத்தை"* (Individuality) *அளிக்கும். பிரச்சனை இருந்தால் நிபுணர்களை நாடவும்.*

*"பொறுப்பு" என்பது குடும்பத்தின் சூழல், பெற்றோர்கள் கையாளும் முறையை*

*அடிப்படையாகக் கொண்டது. தன் மகனுக்கு தன் கைகளால் தான் எல்லாம் செய்ய வேண்டும் என்று பிறந்ததிலிருந்து ஆரம்பித்து, திருமணம் செய்தும் "தானே" செய்து, கடைசியில் மகனின் வாழ்க்கையைப் பாழாக்கியவர்கள் பலர் உண்டு.*

*இதை அப்படியே மகளுக்கு பொருத்தி தந்தைகள் செய்து, மகளுக்கு திருமணமானால் கூட தானே முடிவுகளை எடுத்து... இன்று குடும்பநல கோர்ட்டில் குவிந்து கிடக்கும் விவாகரத்து வழக்குகளில் 80% இதில்தான் சிக்கியுள்ளது என்பதை பல வழக்குறைஞர்கள் கூறுகின்றார்கள்.*

*"பொறுப்பு" என்பது வீடு, பணி, நாடு, வாழ்க்கை ஆகிய அனைத்திலும் வேண்டும். செய்யும் ஒவ்வொரு பணியிலும் பொறுப்பு கூட வேண்டும்.*

*பெறோர்களே யோசியுங்கள்.*

**"எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு"**

*(அதிகாரம் – 47 குறள் 470)*

*"எப்பணியை செய்வதானாலும், அப்பணியினால் பழி ஏற்படுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். தனக்கு ஏற்காத எப்பணியும், இந்த உலகமும் ஏற்றுக்கொள்ளாது என்று அறிந்தால் அப்பணியை செய்தால் பழி ஏற்படும்' என்று இரண்டே வரிகளில் பெற்றோர்களுக்காக பெரும் பொக்கிஷத்தை அளிக்கின்றார் வள்ளுவர். இதை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தால் போதும், பொறுப்பு தானாக, செம்மையாக அவர்களுக்குள்ளே ஏற்படும்.*

*பொறுப்புடன் கூடிய சுதந்திரம் சிறந்த கட்டுப்பாட்டினை அளிக்கும். "சுதந்திரம்" என்றால்*

பொறுப்பற்ற தன்மை என்றுதான் இன்றைய இளைய சமுதாயம் புரிந்து கொள்கின்றது. அதனால் தான், ஓட்டுப் போட்டுவிட்டால் சுதந்திரம், யார் ஆட்சிக்கு வந்தால் என்ன எனும் பொறுப்பற்ற தன்மை, “நான் எதையும் செய்யமாட்டேன், ஆனால் நான் ஓட்டுப் போட்ட அரசாங்கம் எனக்கு அனைத்தையும் செய்துதர வேண்டும். இல்லையெனில் கட்டுப்பாடற்ற போராட்டங்கள்.

பெறோர்களே, இதை கற்றுத்தர இயலாது, நீங்கள் இம்மூன்றையும் பின்பற்றினால் உங்கள் பிள்ளைகள் ஏற்பார்கள். கற்றுத்தருவதைவிட, நடந்து காட்டுவது கற்பூரமாக பற்றிக்கொள்ளும். ஆடியோவைவிட, வீடியோ தானே குழந்தைகளைக் கவர்கின்றது.

மீண்டும் ஒரு முறையோசித்து உடனே செயல்படுத்த துவங்குங்கள், மற்றபெற்றோர்களுடன் பேசுங்கள். ஒருவருக்கொருவர் துணையென்று நடக்கும் பொழுது அறிவாற்றல் கூடும்.

தொடரும்...


STAR Health Insurance
The Health Insurance Specialist

மருத்துவ பாலிசி உங்களை
செல்வந்தராக்காது
ஆனால்
உங்கள் குடும்பத்தை
கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!



மருத்துவமனை வரவேற்பறையில்
சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்



ஏன் மருத்துவ பாலிசி
எடுக்க வேண்டும் என்பதற்கு
பதில் கிடைக்கும்.



S. Narayanan - 9360277372

# எண்ணமே வாழ்க்கை



ஜாவா பைக்கை அநாயசமாக ஓட்டிக் கொண்டு வந்தான் இருபது வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன். ஒன்பது மணியளவில் உச்சகட்ட பரபரப்பில் சென்னை நகரத்தின் ஐ.டி.ஹை வே இயங்கிக் கொண்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் இளைஞனின் வாகனம் கட்டுப்பாடு இழந்து அருகில் இருந்த நடைபாதை மேல் எக்குத் தப்பாக ஏறி சரிந்து விழுந்தது. இளைஞன் ஹெல்மெட் அணியவில்லை. அச்சமயம், வண்டி அருகில் நின்று கொண்டிருந்த போக்குவரத்துக் காவலர் சண்முகத்தின் காலில் மோதியது.

வலியைப் பொருட்படுத்தாமல், சண்முகம் இளைஞனை நோக்கி விரைந்து ஓடினார். இளைஞனின் நிலையைப் பார்த்து, சண்முகத்திற்க கை காலெல்லாம் உதறியது. அடுத்த கணம் 108-க்கு அழைப்பு விடுத்து மருத்துவமனைக்கு இருவரும் அழைத்து செல்லப்பட்டனர். இளைஞனின் கூடவே சண்முகமும் சென்றார். சண்முகத்தின் பாதமும் வீங்க ஆரம்பித்தது. லேசாக மயக்கம் வருவது போன்றநிலையில் இருந்தார்.

சண்முகத்திற்கு ஏறத்தாழ ஐம்பது வயது இருக்கும். ஐ.டி.ஹை வேயில் தினசரி பயணம் செய்பவர்கள், அவரை கண்டிருக்கும் வாய்ப்பு அதிகம். நல்ல உயரம், ஒல்லியான தேகம், Billy Bowden ஐ போல அவர் போக்குவரத்தை சீர் செய்யும் விதமே தனி, கிட்டத்தட்ட அவர் தோரணை அனைத்தும் சாலையில் நடனமாடுவதைப் போலத்தோன்றும். கடும் வெய்யிலிலும் அயர்ச்சியற்று மலர்ந்து இருக்கும் முகத்தை பார்ப்பதற்கே உற்சாகமாக இருக்கும்.

இதையெல்லாம் தாண்டி தனித்து தெரிவது சண்முகத்தின் முறுக்கு மீசை.

எமர்ஜென்ஸி ஆக்ஸிடண்ட் கேஸ் என்றஉடனேயே அருகில் இருந்த சிவம் பவுண்டேஷன் ஆஸ்ப்பிட்டல் அலர்ட் செய்யப்பட்டிருந்தது. ஆம்புலென்ஸ் வந்த உடனேயே துரிதமாக இளைஞன் பரிசோதிக்கப்பட்டு, தலையில் அடி என்பதால் சி.டி.ஸ்கான், எம்.ஆர்.ஐ.கான வேலைகளைத் துரிதப்படுத்தினர். சண்முகம் பரிசோதிக்கப்பட்டார். காலைத் தவிர வேறு எங்கும் காயங்கள் இல்லை. ஆர்த்தோ மருத்துவர் வந்து பரிசோதித்து, கட்டு போட்டுவிட்டார்.

அச்சமயம் சிவம் பவுண்டேஷனின் தலைமை மருத்துவர் ஜெயராமன் ரவுண்ட் வரும் நேரம். எமர்ஜென்ஸி வார்டுக்குள் நுழைந்தவுடன் சண்முகத்தின் முகத்தைப் பார்த்தார். ஜெயராமன் “எங்கேயோ பார்த்த முகம் போல இருக்கிறதே” என்று நினைத்துக் கொண்டே ரவுண்ட்ஸை தொடர்ந்தார்.

டாக்டர்.ஜெயராமன் தினசரி சண்முகம் பணியில் இருக்கும் அதே சாலையில் தான் பயணம் செய்வார். சற்று அமர்ந்து யோசித்துப் பார்த்ததில் ஜெயராமனுக்கு சண்முகம் யாரென்று புரிபட்டுவிட்டது. அன்றாட அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தார். சில வருடங்களாகவே சிவம் பவுண்டேஷன் மருத்துவமனையின் வருவாய் பல மடங்கு குறைந்திருந்தது. அவருடைய தந்தையின் கனவு இந்த மருத்துவமனை. ஆனால் ஆட்சி மாற்றம், தேர்ந்த மருத்துவர்களின் எண்ணிக்கை குறைவு. நம்பிக்கையற்றமனிதர்களின் பேராசையினால் கப்பல் மெதுவாக கவிழ ஆரம்பித்திருந்தது. அச்சமயம் மருத்துவமனையின் ஆடிட்டர் அறையின் உள்ளே நுழைந்தார்.

டாக்டர். ஜெயராமன், நம்ம ரிவ்யூ இருக்கே இப்போ''

"Please take your seat, sir".

"சிவம் பவுண்டேஷன் அக்கவுண்ட்ஸ் reconcile பண்ணியாச்சு. இந்த fiscal year, கிட்டத்தட்ட ஐம்பது கோடி காட்டுது. டாக்டர்.ஜெயராமன் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். இந்த சிக்கலை சரி செய்ய வாய்ப்பே இல்லை என்பதை அறிந்து மனது அத்வானமாக இருந்தது.

"ஓ.கே.சார். நான் உங்களுக்கு எல்லா டாக்குமெண்ட்ஸையும் மெயில் பண்ணிவிடறேன்'' எனக் கூறிவிட்டு ஆடிட்டர் கிளம்பினார்.

எமெர்ஜென்ஸி வார்டில் சண்முகம் அங்கும் இங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்து பெட்டின் அருகில் நின்று கொண்டிருந்த நர்ஸ் செல்வியைக் கூப்பிட்டு,

"சிஸ்டர், நான் பைக் ஆக்ஸிடன்ட் ஆன பையனை கூட்டிட்டு வந்தேன்ல, பையன் பொழச்சிகிட்டானா?

"இருங்க சார், பார்த்துட்டு வந்து சொல்றேன்'' என நர்ஸ் கூறினார்.

ஒரு மணி நேரம் கழித்து ஆர்த்தோ டாக்டர் ரவுண்ட்ஸ் வந்தார்.

"மிஸ்டர் சண்முகம். உங்க கால் அடில எதும் எலும்பு பிரச்சனை இல்லை. தசைல தான் அடிபட்டிருக்கு இரண்டு வாரம் ரெஸ்ட் கொடுங்க சரி ஆயிடும்'' எனக் கூறினார்.

"நன்றி டாக்டர், ஒரு உதவி, என் கூட வந்த பைக்ல அடிபட்ட பையன் பொழச்சிக்கட்டானா''

**V. சிவசங்கரி**

தொடரும்...



## தி நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்

எண் 31/50, "சாய் பார்க்", பெரியாழ்வார் தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை 600059. போன் : 98841 71172 / 80562 44435
http://www.newlifecharitabletrust.org




ஒவ்வொரு நாளும் வயதான மற்றும் நோய்வாய்ப்பட்ட மாடுகள் கைவிடப்பட்டு அவை பிளாஸ்டிக், காகிதம் போன்றவைகளை உண்டு வேதனையான வாழ்க்கை வாழ்கின்றன.

மனிதர்களுக்கு பால் கொடுத்து வந்த புனிதமான பசுக்கள் இப்படி துன்பத்துக்கு ஆளாகலாமா?

நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட் (NLCT) இது போன்ற நிராதரவான பசுக்களை மீட்டு எங்கள் **லிக்ஷ்மி நிவாஸ்** கோசாலையில் பாதுகாத்து பராமரித்து வருகிறோம்.

தற்போது எங்களிடம் 95 பசுக்கள் உள்ளன.

கோசாலையிலிருந்து பால் அருகில் இருக்கும் வேத பாடசாலை மற்றும் கிராம குழந்தைகள், பெரியவர்களுக்கு கொடுக்கிறோம், விற்பனை செய்வதில்லை.

கோசாலை பராமரிப்பிற்கு 5 ஆண்கள், 2 மகளிர், தீவனம், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகள் நன்கொடை மூலமாக கிடைக்கின்றன. கோசாலை பராமரிப்பிற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்கொடையை கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு காசோலையாகவோ, ஆன்லைன் மூலமாகவோ செலுத்தலாம்.

**City union bank**
East Tambaram Branch,
Chennai -600059
SB Account No: 500101010797410
IFSC Code: CIUB0000431

Scan the QR Code to make payment thro Google Pay

அனைத்து நன்கொடைகளுக்கும் 80G கீழ் வரி விலக்கு உண்டு.
FCRA ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தொடர்பு - திருமதி. தீபகலா : +91 98841 71172, 044 - 22399551, 43574464

+91 98841 71172 Office@newlifecharitabletrust.org

எங்கள் கோசாலாவிற்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## இராமாயணம் காட்டும் வாழ்வியல்

சென்றமாத தொடரும்...

குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்தாலும் அதை வழங்குபவர்கள் கருணை உள்ளம் படைத்த நியாயவான்கள். அயோத்தி நகர மக்கள் நடத்தையில் குற்றமில்லாதவர்கள்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" என்ற குறள் நெறிப்படி ஆட்சியை நடத்தியவர் தசரதர். குடி மக்களை தனது கண்களைப்போல் பாதுகாத்தார். ஒரு இராஜ்யம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக தசரதமன்னன் ஆட்சிபுரிந்தான். அரசனுக்கு நல்ல முறையில் ஆலோசனைகள் வழங்க வசிஷ்டர், வாமதேவர், சுமந்திரர் மற்றும் பலர் இருந்தனர். பலகலைகளில் திறமை வாயந்த நிபுணர்கள் அயோத்தியில் இருந்தார்கள். நவநாகரீகமான முறையில் கட்டப்பட்ட பல மாடிக்கட்டடங்கள் அயோத்தியில் இருந்தன. விசாலமான நீள அகலமான சாலைகளைக் கொண்ட நகரம் அயோத்தி.

மக்கள் மிகவும் நிறைவானவர்கள். யாரிடமும் பேராசை, கஞ்சம், குரோதம், மூர்க்கத்தனம் கிடையாது. மக்கள் அனைவரும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள், நகரில் உள்ள பெண்களும் நன்கு படித்தவர்கள். அயோத்தி மக்கள் கிட்டத்தட்ட ஒரு முனிவர்களைப் போல் இருப்பார்கள். அவரவர்கள் தர்மத்தை முறையாக கடைபிடித்து வந்தார்கள். மக்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தனர். நாட்டில் அகால மரணம் கிடையாது.

அரசன் தசரதன் தொலை நோக்கு பார்வை கொண்டவர். அவருக்கு எதிரிகளே கிடையாது.

அனைவருமே நண்பர்கள். இராமர் பிறப்பதற்கு முன்பே ராமராஜ்யம் நடத்தியவர் மன்னர் தசரதர். அவர்நெடுங்காலம் செங்கோல் தாங்கி முறையாக நாட்டை ஆண்டுவந்தார். பத்து தேர்களை ஒரே சமயத்தில் நடத்தும் திறனைப் பெற்றவர் என்பதால் தசரதன் என்று பெயர்வந்தது. எந்தச் செயலையும் சான்றோர்களிடமும், நிபுணர்களிடமும் கலந்து ஆலோசித்து ஆட்சியை நிர்வகித்து வந்தார்.

ஒட்டுமொத்த அயோத்தி மக்களும் சுயநலத்திற்கு அப்பாற்பட்டவர்கள். அரசனுக்கும் குடிமக்களுக்கும் இடையே மிகப்பெரிய பிணைப்பு இருந்தது. அறவழியில் மன்னன் ஆட்சி செய்ததால் திங்கள் மும்மாரிப் பெய்தது. மனித முயற்சியும், தெய்வ சம்பத்தும் ஒன்று கூடி இருந்தன. கோசலநாடு ஒரு பூலோக வைகுண்டமாகவே காட்சி அளித்தது.

**காந்தாமணி நாராயணன்.**

## வேதபாரதி குரோம்பேட்டை

**பிரதி மாதம் ஶ்ரீ மஹா ஸ்வாமிகள் அனுஷபூஜை,**

வேத வகுப்புகள், குழந்தைகளுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட, யுவஶ்ரீ வகுப்புகள், பாரத கலாச்சார விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, ஸ்லோகங்கள் ஸகஸ்ரநாம பாராயணம் முழுமையாக தெரிந்துகொள்ள தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தொடர்புக்கு :

**ஶ்ரீ வெங்கடேசன் - 8668139560**

**ஶ்ரீ வெங்கட்ராமன் - 9962837424**

**ஶ்ரீமான் ராம்குமார் சாஸ்திரிகள் - 9940430267**

**ஶ்ரீமதி ராஜலட்சுமி - 7092199447**

# "வேதமாதாவை" வேண்டல்



லோக க்ஷேமத்திற்காகவும் நமது கலாச்சார பண்பாடு செழிக்கவும் பல சத்கார்யங்களை செய்துவரும் வேதபாரதி, காயத்ரி மாதாவை வேண்டும் பொருட்டு **"கோடி காயத்ரி ஜப யக்ஞம்"** கடந்த பல மாதங்களாக தமிழகத்தின் பல ஊர்கள் மற்றும் புதுச்சேரியின் வேதபாரதி உறுப்பினர்கள் அவரவர் இல்லங்களில் "லோக க்ஷேமார்த்த சங்கல்பத்தோடு ஜபித்து வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதி "காயத்ரி மஹா யக்ஞம்" கடந்த 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை, புதுச்சேரி, ECR சாலை, ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

பதினைந்து ஹோம குண்டங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் தலா எட்டு பேர் வீதம் 120 பேர் கலந்து கொண்டு ஒன்றேகால் லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவர்த்திகள் செய்தனர். ப்ரம்மஸ்ரீ ராஜா ராஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றஇந்த மஹா யக்ஞத்தின் பிரதான ஹோம குணடத்தில் 1008 தாமரை புஷ்பங்களை அன்னை காயத்ரி தேவிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அனைத்து ஹோம குண்டங்களிலும் எட்டுவித திரவியங்கள் அக்னி பகவான் மூலமாக அன்னைக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

ஒவ்வொரு ஹோம குண்டமும் புத்தம் புதிய செங்கற்கள் அடுக்கி, பசுஞ் சாணத்தால் மெழுகி, அரிசி மாக்கோலம் இட்டு மிக நேர்த்தியாக பாரம்பரியத்தோடு அமைக்கப்பட்டிருந்தது. ஹோம

குண்டங்கள் அமைந்திருந்த யாகசாலை தரைப்பகுதி முழுதும் பசுஞ் சாணத்தால் மெழுகி மாக்கோலத்துடன் இடப்பட்டிருந்த செம்மண் காவிக் கோலம் தொன்றுதொட்டு வரும் நமது வீட்டு வாசல்களை நினைவூட்டியது.

யக்ஞம் நடைபெற்றபள்ளி வளாக நுழைவாயிலில் கட்டப்பட்டிருந்த வாழைமரங்கள் வந்தாரை வரவேற்க, யாகசாலையைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த வாழைக் கன்றுகளும், மாவிலை மற்றும் தென்னை குருத்தோலை தோரணங்களும் மங்கல நிகழ்ச்சிக்கு மேலும் மங்கலம் சேர்த்தன.

ஆரம்பம் முதல் கடைசி வரை யக்ஞம் நடைபெற்ற மூன்று மணி நேரத்திற்கும் மேலாக, யக்ஞத்தில் கலந்து கொண்டு ஆவர்த்திகள் செய்த நூற்று இருபதுக்கும் மேற்பட்டோர் தங்களிடத்திலிருந்து சற்றும் நகரவில்லை. இவர்களும், பார்வையாளர்கள் யாவரும் கடைசிவரை செல்போன் பயன்படுத்தாது செயல்பட்டதும், சேவை செய்யும் உதவியாளர்கள் ஒரு சிலரைத் தவிர யாரும் யாகசாலையில் நுழையாதது ஆகிய கட்டுப்பாட்டோடு அனைவரும் பங்கு கொண்ட விதம் "காயத்ரி தேவியின்" பெரும் சக்தியை வெளிக்காட்டியது.

நமது பாரம்பரிய வழக்கப்படி ஹோம குண்டங்களில் ஆவர்த்தி செய்தவர்களுக்கு முதலில் பந்தி பரிமாறி "ஆபோஜனம்" வழங்கப்பட்டது. தொடர்ந்து கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை கல்யாண சாப்பாடு பரிமாறப்பட்டது.

பந்தியில் உணவு பரிமாறுதல், மாக்கோலமிடுதல் என ஒவ்வொரு பணியிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி யக்ஞம் முழுமைபெற பாரம்பரிய மடிசார்

*சேலையில் சேவை செய்த சக்தி வேதபாரதி மாதர்களின் தாயுள்ள பணி பூரணமாக பிரதிபலித்தது.*

*சமுதாய பாகுபாடின்றி 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் போஜனம் செய்து இல்லம் திரும்புகையில் தாம்பூலப்பை வழங்கப்பட்டது. குறிப்பாக அதில் கொடுக்கப்பட்ட "மஹா யக்ஞ ரக்ஷை" பெற்றுச் சென்றவர்களுக்கு பெரும் திருப்தியை கொடுத்தது.*

*முதல் நாள் 03.09.2022 சனிக்கிழமை மாலை அனுஷம் மஹா பெரியவாளை பிரார்த்தனை செய்து ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பாராயணத்தோடு பெரியவா அர்ச்சனையுடன் குரு துணையோடு துவங்கப்பட்ட இவ்வைபவத்தில், புதுவை அரசின், சட்டப்பேரவை தலைவர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வேதபாரதியின் பொதுச் செயலாளர் திரு.R.வெங்கட்ராமன், சென்னை, திருச்சி வேதபாரதியின் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்து அன்னை வேதமாதா காயத்ரி தேவியின் பேரருள் பெற்றனர்.*

*மிக நேர்த்தியாக, பாரம்பர்யம் மாறாமல் நடைபெற்றஇந்த மஹா யக்ஞத்திற்கான விரிவான ஏற்பாடுகளை புதுச்சேரி வேதபாரதி தலைவர் NJL.ரமேஷ், துணைத் தலைவர் அட்வகேட் C.பட்டாபி ராமன் மற்றும் செயலாளர் R.சந்திரசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.*

*வேதமாதாவை லோக க்ஷேமம் வேண்டி தொடர்ந்து பிரார்த்திப்போம். "லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து".*

**- ஆதிரையன்**


Find Your Partner
Best of Luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY .com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
Register & Get
Brides / Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
Membership Fees Rs.2000 only
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

# லிகித ஜபம்

இறைவனின் பேரருளை பெற பல்வேறு மார்க்கங்களை நம் புராணங்களிலும், சாஸ்த்தரங்களிலும் கூறப்பட்டு இருந்தாலும் தற்போதைய அவசர உலகில் நேரமின்மை, மற்றும் பல அலுவல்கள் என்ற போர்வையில் நாம் பல வழிபாடுகளை மெது மெதுவாக இழந்து அல்லது தவிர்த்து வருகிறோம். இதனாலோ அல்லது வேறு பல சூழ்நிலைகளாலோ மன உளைச்சல், பலவித நோய்கள், குடும்பத்தில் குழப்பங்கள் என்று எங்கு நோக்கிலும் மனித குலம் அவதிப்பட்டுக் கொண்டு வருகிறது. இத்தகைய அவதிகள், சீற்றங்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ள பகவானும் அவ்வப்போது நமக்கு நல் உபாயங்களை காட்டிக் கொண்டு தான் வருகிறார். அதில் ஒன்று நாம ஜாபம் மிகப் பிரபலமாகவும், சக்தி வாய்ந்ததும் ஆன 'ராம' ஜபம் எழுதுவது நம்மில் நிறைய பேருக்கு தினப் பழக்கமாக இருக்கலாம். அதுபோலவே மற்றுமொறு சிறந்த ஜபம் தான் "நாமத்ரய ஜபம்" உண்மையில் இது நம்மை காக்கும் ஒரு அஸ்தரம் (ஆயுதம்) தீய நோய்களையும், எதிர்மறை சக்திகளையும் எதிர்த்துப் போராடும் ஒரு மாபெரும் அஸ்தரமாக இந்த ஜபம் செயல்படுகிறது. அதாவது பாதுகாக்கிறது. ஜயம் கொடுக்கும் இந்த ஜபம் எழுதுவது வெகு எளிமை.

**அதி சக்தி வாய்ந்த வார்த்தைகளாகவது :**

**அச்யுதாய நம : அனந்தாய நம : கோவிந்தாய நம :**

இந்த லிகித ஜபம் எழுதி பயன்பெற்றவர்கள் ஏராளம். தங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு, திருமணங்களுக்கு, நோய்களிலிருந்து விடுபட மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த புத்தகம் இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த லிகித ஜெப புத்தகம் வேண்டுவோர் அனுகவேண்டிய **தொலைபேசி எண்.9345725265.**

★ அடக்க விலை ரூ.30/- பணம் கொடுக்க விரும்புபவர்கள் G-Pay No.9345725265 என்ற எண்ணில் அனுப்பலாம்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# பித்ரு பூஜை செய்யும் ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள், நெம்மேலி

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் அந்தந்த ஆலயங்களுக்குக்கென ஒரு சிறப்பு அம்சம் இருக்கும். அவ்வகையில் பித்ரு பூஜை மட்டுமே நடைபெறும் வகையில் உள்ள திருக்கோயில் செங்கல்பட்டு - திருக்கழுக்குன்றம் சாலையில் 7 கி.மீ. தொலைவில் உள்ள நெம்மேலி லட்சுமி நாராயணப் பெருமாள் கோவில் ஆகும்.*

*நெம்மேலிக்குப் புராணப்பெயர் புண்டாரீகநல்லூர், பிண்டம் வைத்த நல்லூர் என்றும் பெயர்.*

*இங்குள்ள தீர்த்தக்குளம் அர்க்கிய புஷ்கரணி, ஜீயர் குளம் என அழைக்கப்படுகிறது.*

*ஹெலப்பிய கயா" என்னும் சிறப்புப் பெயர் கொண்டது இத்தலம்.*

*மூலவர் லட்சுமி நாராயணர் என்னும், உற்சவர் ஸ்ரார்த்த ஸம்ரக்ஷண நாராயணர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.*

*17 ஆம் நூற்றாண்டில் இங்கு திவானாகப் பணிபுரிந்தவர் யக்ஞ நாராயண சர்மா என்பவர். இவர் மனைவி சரசவாணி, இவர்கள் சுக்லயஜுர் வேத ரிஷியான யாக்ஞவல்கியரை குருவாக ஏற்று, சுக்லயஜுர் வேதத்தைப் பின்பற்றினார்.*

*இத்தம்பதியர் இங்குள்ள பெருமாள் மீது அபார பக்தி கொண்டவர்கள். அரசுக்குத் தரவேண்டிய வரிப்பணத்தையும் இவ்வாலய திருப்பணிக்கே செலவழித்தனர். இதனால் ஆற்காட்டு நவாப்*

கோபத்திற்கு ஆளாகினர். இவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பெற்றது.

குழந்தைப் பேறு இல்லாத இத்தம்பதியர், பெருமாளையே தம் மகனாக எண்ணி வாழ்ந்தவர்கள். தங்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதைக் கேட்டவுடன், பெருமாள் முன்பு மனம் விட்டுப் பேசினர். சர்மாவின் மனதில் திருவிடந்தை ஆதிவராஹரைச் சுட்டிக்காட்டினார் பெருமாள். உடனே இருவரும் திருவிடந்தை புறப்பட்டுச் சென்று, அங்குள்ள திருக்குளத்தில் இறங்கி, பெருமாளைப் போற்றிய வண்ணம் உயிர் நீத்தனர்.

அவர்கள் உயிர் நீத்தற்கு முன்பு, பெருமாளிடம், "எங்களுக்கு ஈமக்கிரியை செய்ய மகன் இல்லை, எங்களுக்கு யார் கர்மாக்களைச் செய்வர்? நாராயணா, நீதானே எங்கள் மகன், உன் மனைவி லெட்சுமியே எங்கள் மருமகள், நீங்களே எங்களுக்குக் கர்மா செய்திட வேண்டும். அது மட்டுமல்ல; உன் சந்நிதிக்கு எங்கள் நிலையில் யார்வந்தாலும் அவர்களுக்கும் நீயே சிரார்த்தம் செய்திட வேண்டும்" என வேண்டியே உயிர் நீத்தனர்.

ஆற்காட்டு நவாப் தன் பிழையை அறிந்து இந்த ஆலயம் வந்து இதற்கு என்ன பரிகாரம் செய்வதெனப் பெருமாளிடம் வேண்டினார். உடனே பெருமாள் பெருஞ்ஜோதி வடிவில் தோன்றி சர்மா தம்பதியருக்குத் தானே கிரியைகள் செய்வதாகவும், இங்கு யார் வந்து வேண்டினாலும் அவர்களுக்கும் ஈமக் கிரியை செய்வதாகவும் உறுதியளித்தார்.

அதன்படியே இங்கு பெருமாள் "சிரார்த்த

ஸம்ரக்ஷண பெருமாள்" எனப் பெயர் பூண்டு சேவை சாதிக்கிறார்.

இவ்வாலயம் சிறிய கோவிலாக இருந்தாலும் கீர்த்தியுடையது. இங்க வைகானஸ ஆகமம் முறைபின்பற்றப்படுகிறது. தாயார் சாலக்கிராம வடிவில் அருள் பாலிக்கிறார்.

இங்கு செய்யப்படும் சிரார்த்தம் "சுப சிரார்த்தம்" என அழைக்கப்படுகிறது. நாள் தோறும் பெருமாள் 12.00 – 1.00 மணிவரை திதி செய்கிறார். 1.00 மணிக்கு மேல் தான் ஒரு வேளை திரவாராதனம் நடைபெறுகிறது.

திதி கொடுப்பவர்கள் காலை 9.00 மணிக்குள் வந்துவிட வேண்டும். ரூ.500/- பணம் கட்ட வேண்டும்.

மஞ்சள் அட்சதை, எள், தர்ப்பை, பவித்திரம், வெற்றிலை பாக்கு, பழம் ஆகியவற்றைப் பெருமாளுக்கு முன்பு வைத்து சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

அதன் பின் கோயிலின் பின்புறத்தே உள்ள விஷ்ணு பாதம் முன்பு அமர்ந்து, பட்டர்கள் வழிகாட்டிட சிரார்த்தம் முடிந்து மீண்டும் பெருமாளிடம் வந்து பெருமாளுக்கு சகல ஆராதனைகளும் செய்கின்றனர்.

இறுதியில் வெண் பொங்கல், தயிர்சாதம், பிரண்டை எள் துவையல் முதலியன பிரசாதமாகத் தருகின்றனர்.

பெற்றோருக்குத் திதி கொடுக்க மறந்தோரும், அகால மரணமடைந்தவருக்கும் இங்குப் பரிஹாரம் செய்து கொள்ளலாம். பித்ரு தோஷம் போக்கும் இப்பெருமாளை வணங்கி நல்லருள் பெறுவோமாக.

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY.com
An Auspicious Beginning ...

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

# Kamalambal Sweets

*(A unit of Kamalambal Catering Services, since 1998)*

| Sweet | Quantity | Price (Rs.) |
|---|---|---|
| Kaju Katli | 1 Kg | 1100 |
| Karuppatti Mysorepak | 1 Kg | 800 |
| Ghee Mysore Pak | 1 Kg | 600 |
| Mothi Laddu | 1 Kg | 600 |
| Mothi Pak | 1 Kg | 600 |
| Hajmeer Burfi | 1 Kg | 600 |
| Dry Fruit Halwa | 1 Kg | 600 |
| Soan Papdi | 1 Kg | 600 |
| Special Maalaadu | 1 Kg | 600 |
| Athirasam | 1 Kg | 600 |
| Wheat Halwa | 1 Kg | 600 |
| Jangiri | 1 Kg | 500 |
| Laddu | 1 Kg | 500 |
| Mysore Pak | 1 Kg | 500 |
| Badhusha | 1 Kg | 500 |
| Doodh Peda | 1 Kg | 500 |
| Badham Halwa | 200 gms | 240 |
| Gulab Jamun | 10 PCs | 200 |
| Diwali Legiyam | 100 gms | 200 |

| Savoury | Quantity | Price (Rs.) |
|---|---|---|
| Thenkuzhal Murukku | 1 Kg | 450 |
| Butter Murukku (Broken) | 1 Kg | 450 |
| Ribbon Pakoda | 1 Kg | 450 |
| Kara Sev | 1 Kg | 450 |
| Spl. Mixture | 1 Kg | 400 |
| Oma Podi | 1 Kg | 400 |
| Kara Boondhi | 1 Kg | 400 |
| Red Rice Thenkuzhal | 1kg | 550 |




**Assorted Sweet Boxes:**
1/4kg - Rs. 150
1/2kg - Rs. 300

Door Delivery done
( Nominal charges Apply)
Out Station Delivery also available with parcel charges

WhatsApp/ Call to place your order
9551519115 / 9444017858 / 9123504213

**9790975502**

Follow us on : kamalambalcateringservices

## 14.08.2022 அன்று நடந்த திருப்பூர் விஷ்ணு மண்டலியும், வேதபாரதியும் இணைந்து நடத்திய காயத்ரீ ஜப யக்ஞ விழாவில்

*மதுரை சின்மயாநந்தா மிஷன் ஸ்ரீ சிவயோகானந்தா ஸ்வாமிகள் அவர்கள் அருளிய உரையை அனுபவித்தோம், ரசித்தோம்.. பகிர்ந்து கொள்கிறேன். மிக அற்புதமான ஆழ்ந்த உரை, ஆனால் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில், எளியமுறையில் :*

**ஹிந்து தர்மம் :**

*முதலில் 5 பாகங்களாக முக்யமாக பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு மனிதனும் பின்பற்றவேண்டும்.*

*ஹிந்து மதத்தில் 14 சாஸ்திரங்கள் உள்ளன.*

1. *(4) ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள்*
2. *(6) உப வேதங்கள்*
3. *11 மீமாம்சம் (கலந்து உரையாடுவது)*
4. *12 நியயாம்சம்*
5. *13 புராண, இதிகாசங்கள்*

*இராமாயணம், மஹாபாரதம் கதைகளின் மூலமாக நமது வாழ்க்கையை நெறிபடுத்தி, வாழும் முறைகளை கற்பிப்பது.*

**யக்ஷ ப்ரசன்னம்.**

*தர்ம பக்க உபாக்யானம் அல்லது அக்க்ஷரதம் – யுதிஷ்ட்ரருக்கும், யமராஜனுக்கும் இடையே நடந்த கேள்வி – பதில்கள். இதில் 124 கேள்வி பதில்கள் உள்ளன. இவை அனைத்துமே தர்மத்தை போதிப்பவை இதில் ஸ்ரீ சுவாமிகள் 5 தர்மங்களை மிக முக்யமாக குறிப்பிடுகிறார். மற்றமதங்களில் பரவலாக அனைவரும் கூறுவது போல பைபிள் குரான் மத புத்தங்களாக உள்ளன. இந்து மதத்தினருக்கு*

*ஏராளமாக புத்தக களஞ்சியம் இருந்தாலும், யக்ஷ பிரசன்னத்தை தெளிவாக கற்று அறிய வேண்டும்.*

*குறைந்த பக்ஷம்.. ஐந்து தர்மங்களை கடை பிடிக்க வேண்டும்.*

*அந்த 5 தர்மங்கள் என்ன?*

**1. தேவ யக்ஞம் :**

*தர்மத்திற்காக நாம் செய்ய வேண்டிய, எதிர்பார்ப்பு எதுவும் இல்லாத சேவைகள், கடமைகள்.*

**உ. பிதுர் கர்மா :**

*நமது மூதாதையர்களுக்கும், பெரியோர்களுக்கும் நமது கடமைகளை சரிவர ஆற்றுதல்.*

*இந்த கடமையை சரிவர நிறைவேற்றினாலே ஐந்து தேவர்களும் நம்மை ஆசீர்வதிப்பதோடு, நமது சந்ததியினருக்கும் அந்த ஆசீர்வாத பலன் கிட்டும் என்பது உறுதி.*

**மூன்றாவதாக : அதிதி தேவோ பவ :**

*விருந்தினர்களை உபசரிப்பது... அவர்களை முகம் கோணாமல் கவனிப்பது கடவுளுக்கே சேவை செய்வது போன்றது.*

**பிர்த்திய தர்மம் :**

*நான்காவதாக, நம்மை அண்டி இருப்பவர்களை கவனித்துக் கொள்வது.*

*உதாரணமாக, படிக்கும் மாணாக்கன் ஒருவர், ஆனால் பொருள் இல்லாநிலை அவசியம் நாம் அந்த இடத்தில் அவர்களை ஆதரிக்க வேண்டும்.*

**5. ஆத்ம தர்மம் :**

*நம்மையே கேள்விகள் மூலம் தெளிவற உணர்தல்*
*நான் யார்?*
*நான் ஏன் பிறந்தேன்?*
*என்னுடைய பிறப்பு பயன் உள்ளதா?*

*என்னுடைய பிறப்பும், இன்று இருப்பதும் யாருக்காவது பயன் தருகிறார் போல உள்ளதா?*

*ஒரு மனிதனுக்கு, மனித நேயத்திற்கு நான்கு நிலைப்பாடுகள் அறம், பொருள், இன்பம், வீடு.*

*5 தர்மங்களை நடைமுறைபடுத்தி எவ்வாறு வாழ வேண்டும் என்றும், இவ்வாறு ஐந்து தர்மங்களை பின்பற்றி எளிய வாழ்வை வாழ்ந்து ஹிந்து தர்மத்தை பேண முயற்சிப்போம் என்றும் ஒவ்வொருவர் மனதிலும் தனது அருமையான உரையில் கூறி, "நச்" சென்று பதிய வைத்த ஸ்ரீ சுவாமிகளுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.*

**லக்ஷ்மி நடராஜன், திருப்பூர்.**

## வாசகர் கடிதம்

*செம்டம்பர் மாத புத்தகத்தில் ஆதிசங்கரர் குறித்த விளக்கம், மன நிம்மதி அளித்தது. புத்தகம் மிக அருமையான முறையில் பல புதிய செய்திகளுடன் வெளிவருவது பாராட்டிற்குரியது.*

**- நடராஜன்,** *பாண்டிச்சேரி.*

## வேதபாரதி - தருமபுரி

*கோடி காயத்ரீ ஜப யக்ஞம் பூர்த்தி விழா தர்மபுரியில் நவம்பர் / டிசம்பர் மாதத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.*

மேலும் தொடர்புக்கு : **94432 23838**


Rs.1000
inclusive of
tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
www.wopper.in
WOPPER



## ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**

**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**

**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை பரிந்துரைத்து ஊக்க வெகுமதியை பெறுங்கள்
₹150* வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805 (or)
Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th October 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.